# உதயன்

புதன் பெரும்பகை உள்ளே...

சுடர் : 37
கதிர் : 341

புதன்கிழமை
02 நவம்பர் 2022

ஐப்பசி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை : ரூ. 50


அரசாங்கத்துக்கு எதிராக

# கொழும்பில் இன்று பெரும் போராட்டம்!

தொழிற்சங்கங்கள், கட்சிகள் ஓரணி
பொலிஸார், இராணுவத்தினர் குவிப்பு

**கொழும்பு, நவம்பர் 2**

**அரசாங்கத்தின் அடக்குமுறை மற்றும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தியும் தலைநகர் கொழும்பில் இன்று பெரும் போராட்டம் இடம்பெறவுள்ளது.**

15 >

## இம்மாத இறுதிக்குள் சீனாவிடமிருந்து டீசல்

### விஜேசேகர நம்பிக்கை

கொழும்பு, நவ. 2
இலங்கைக்கு சீனாவிடம் இருந்து டீசல் கிடைக்கக் கூடிய சாத்தியப்பாடுகள் இருக்கின்றன என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். 15 >

## விபத்தில் முதியவர் இறப்பு!

யாழ்ப்பாணம், நவ. 2
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் - உப்புமடம் சந்தியடியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். 15 >



மூன்று தினங்களாகத் தொடர் மழை

## யாழ். காக்கைதீவுப் பகுதியில் 11 குடும்பங்கள் இடப்பெயர்வு!

யாழ்ப்பாணம், நவ. 2
யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று தினங்களாகத் தொடரும் கனமழை காரணமாக - சண்டிலிப்பாய் 15 >

## வடக்கில் இன்று 150 மி.மீ. மழை!

யாழ்ப்பாணம், நவ. 2
வடக்கு மாகாணத்திலும் நாட்டில் இதர சில பகுதிகளிலும் 150 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. 15 >

## சிப்பாயொருவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 2
காங்கேசன்துறை கடற்படைச் சிப்பாயொருவர் அவர் வசித்த விடுதியில் இருந்து நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார். சன்னி அப்புகே சுரங்க ரொசாந்த சில்வா (வயது-34) என்ற சிப்பாயே சடலமாக மீட்கப்பட்டவராவார். 15 >




யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத் தூபியில் நேற்றையதினம் மாணவர்களால் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. சிரமதானப் பணிகளைத் தொடர்ந்து மாணவர்களால் தூபிக்கு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. அதிகளவான மாணவர்கள் தன்னுணர்வுடன் சிரமதானப் பணியிலும், அஞ்சலியிலும் தம்மை ஈடுபடுத்திக்கொண்டனர். (அ-ம-125-27)

கோப்பாய் பகுதியிலுள்ள

## மாவீரர் துயிலுமில்லத்தில் இராணுவத்தினர் குடிப்பம்!

யாழ்ப்பாணம், நவ. 2
யாழ்ப்பாணம் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் நேற்றையதினம் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருடன், குறித்த பகுதியில் பாதுகாப்புக் 15 >

## தவறான முடிவெடுத்து இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 2
ஏழாலை கிழக்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தவறான 15 >

## ஆளில்லாத வீட்டில் 6 பவுண் 'அபேஸ்'

### மந்துவிலில் சம்பவம்

கொடிகாமம், நவ. 2
கணவனும் மனைவியும் வேலைக்குச்சென்ற வேளையில் வீட்டில் இருந்த 6 பவுண் நகை திருடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் மந்துவில் மேற்கு பனங் 15 >

## சமூகப்பணியாளரும் ஊடகருமான செல்வராஜா றமேஸ் காலமானார்!



யாழ்ப்பாணம், நவ. 2
உதயன் உள்ளிட்ட பல ஊடகங்களுக்கு சுயாதீன ஊடகவியலாளராகவும், சமூக சேவையாளராகவும் நீண்ட காலம் செயற்பட்டுவந்த செல்வராஜா றமேஸ் (வயது-53) நேற்று மாலை காலமானார்.
ஹேமலதா ஞாபகார்த்த நிதியத்தின் தலைவராகவும், கமநல மற்றும் மீன்பிடி அமைப்புக் 15 >

## கத்தியைக்காட்டி மிரட்டி பெண்களிடம் வழிப்பறி!

யாழ்ப்பாணம், நவ. 2
அச்சுவேலி ஆஸ்பத்திரி வீதியில் மூன்று பெண்களிடம் நேற்றையதினம் கத்திமுனையில் கொள்ளையிடப்பட்டுள்ளது என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. 15 >





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டான்குளத்தில் அனுமதியற்று அமைக்கப்படும் 'பெற்றோல் செற்'

## கிராம மக்களும், விவசாயிகளும் எதிர்ப்பு

**மன்னார், நவ.2**

**மன்னார், மாந்தை மேற்குப் பிரதேச செயலக பிரிவில் உள்ள ஆண்டான்குளத்தில் சட்டவிரோதமாக தனியார் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்களும், விவசாயிகளும் குற்றஞ்சாட்டுகின்றனர்.**

இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கப்படும் காணி பிரதான குளத்தின் அருகில் உள்ள காணி என்று தெரிவித்த அந்தப் பகுதி மக்கள், சில ஆண்டுகளுக்கு முன்னர் வரை அது விவசாயக் காணி என்றும் குறிப்பிட்டனர். அந்தக் காணியின் பின்புறத்திலும் பல விவசாயக் காணிகள் உள்ளன என்று சுட்டிக்காட்டிய பொதுமக்கள், உரிய அனுமதி பெறாது இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கப்படுகின்றது என்றும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கமநலத் திணைக்களம், சுற்றுச் சூழல் பிரதேச தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் போன்ற உரிய திணைக்களங்களிடம் முறையாக அனுமதி பெறாது இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கப்படுகின்றது என்று பிரதேச மக்களும், விவசாயிகளும் கூறுகின்றனர்.

இது தொடர்பாக கமநலத் திணைக்கள அதிகாரிகளிடம் கேட்டபோது, எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்கு எந்த அனுமதியும் பெறப்படவில்லை என்று தெரிவித்தனர்.

அருகில் உள்ள விவசாயக் காணிகள் மற்றும் பிரதான குளம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு, அந்தப் பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்கு அதிகாரிகள் தடை விதிக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை, தற்போது ஆண்டான்குளத்தில் இருந்து 7 கிலோமீற்றர் தூரத்தில் உயிலங்குளம் எரிபொருள் நிரப்பு நிலையம் உள்ளது. ஆனால் பெரியமடு, சன்னார், ஈச்சளவக்கை கிராமத்து மக்கள் ஒரு லீற்றர் பெற்றோல் கொள்வனவு செய்வதற்காக மேலதிகமாக ஒரு லீற்றர் பெற்றோல் செலவு செய்து உயிலங்குளம், திருக்கேதீஸ்வரம் போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. மாவட்டச் செயலர் மற்றும் ஆண்டான்குளம் பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்க அனுமதி கொடுத்த அதிகாரிகள் அதை மீள்பரிசீலனை செய்து எமது கிராமத்து மக்களின் நன்மை கருதி சிந்திக்க வேண்டும் என்று பெரியமடு, சன்னார், ஈச்சளவக்கை கிராமத்து மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-213)

# வீசப்படும் கழிவுகளால் பெரும் சுகாதாரச் சீர்கேடு

யாழ்ப்பாணம், நவ.2

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் வீதியையும் , கோவில் வீதியையும் இணைக்கும் கோவில் ஒழுங்கைப் பகுதிகளில் விஷமிகள் கழிவுகளை வீசுவதால் பல இன்னல்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது என்று அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில், ஒழுங்கை பகுதியில் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் ஒழுங்கைக்குள் வசிப்பவர்கள் போக்குவரத்து உள்ளிட்ட விடயங்களில் இன்னல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வீசப்படும் கழிவுகள் மழை வெள்ளத்தில் மிதந்து வீடுகளுக்குள் வருவதாலும், வீதிகளில் வெள்ளநீருடன் கழிவுகள் சிதறிக் காணப்படுவதாலும் பல சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதுதொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபையினருக்குத் தெரியப்படுத்தப்பட்டபோதும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (எ-20)

# தன்னிச்சையாகத் திறந்தது குக்குலே கங்கை வான்கதவு

## மக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 2

குக்குலே கங்கை நீர்த்தேக்கத்தை அண்டிய தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, அந்த நீர்த்தேக்கத்தின் 2 வான்கதவுகள் தன்னிச்சையாகத் திறந்துள்ளன.

வான் கதவுகள் திறக்கப்பட்டதையடுத்து தற்போது நீர்த்தேக்கத்திலிருந்து விநாடிக்கு 500 கனமீற்றர் அளவில் தண்ணீர் வெளியேறுகிறது.

இந்த நிலையில் புலத்சிங்கள, அயகம, பாலிந்தநுவர ஆகிய பிரதேசசெயலகப் பிரிவுகளில் வசிக்கும் மக்கள் வெள்ள இடர் தொடர்பில் எச்சரிக்கையாக இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் என்பன அறிவுறுத்தியுள்ளன. (ச-இ)

# தென்னை வீழ்ந்து மின்கம்பி சேதம்

சாவகச்சேரி, நவ. 2

மழையுடன், வீசிய கடும்காற்றால் தென்னை மரம் வேருடன் சரிந்து வீதியோர மின்கம்பி மீது வீழ்ந்தது. இந்தச்சம்பவம் மிருசுவில் உசன் பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

மழை பெய்து கொண்டிருந்த வேளையில் மக்கள் நடமாட்டம் இல்லாததால் மின்கம்பிகள் அறுந்த போதிலும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இலங்கை மின்சார சபை ஊழியர்களால் மின்கம்பம் சீர்செய்யப்பட்டது. (எ-14.9)

# நாட்டை வந்தடைந்த நிலக்கரிக் கப்பல்


கொழும்பு, நவ. 2

நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்துக்கான நிலக்கரிக் கப்பலொன்று நேற்று செவ்வாய்க்கிழமை நாட்டை வந்தடைந்தது. தென்னாபிரிக்காவிலிருந்து நாட்டை வந்தடைந்த கப்பலில் 60 ஆயிரம் மெற்றிக்தொன் நிலக்கரி உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே கடந்த சில தினங்களுக்கு முன்னரும் 60 ஆயிரம் மெற்றிக்தொன் நிலக்கரியை ஏற்றிய கப்பலொன்று நாட்டை வந்தடைந்தது. வாரத்துக்கு ஒரு கப்பல் என்ற அடிப்படையில் 2.2 மெற்றிக்தொன் நிலக்கரி நாட்டுக்குக் கொண்டு வரப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-14.இ)

# விவசாயக் காணிகளை பறித்தெடுக்க முயற்சி!

## மடுப் பிரதேச விவசாய அமைப்புக்கள் ஆர்ப்பாட்டம்




யாழ்ப்பாணம், நவ.2

மன்னார் மாவட்டச் செயலர், மடுவில் உள்ள எமது பாரம்பரிய விவசாயக் காணிகளை பாதிரியாருக்கு வழங்குவதற்கு முயற்சிக்கின்றார் என்று தெரிவித்து மடு பிரதேச விவசாய அமைப்புகள் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண விவசாய அமைச்சின் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:

30 வருடங்களுக்கு மேலாக அந்தப் பிரதேசத்தில் உள்ள அரச காணிகளில் விவசாயம் செய்து வருகிறோம். இந்தக் காணியை பாதிரியார் ஒருவர் தமக்குரிய காணி என எவ்வித மான ஆதாரங்களும் இன்றி கூட்டத் தீர்மானம் எனக் கூறி அபகரிக்க முயல்கின்றார். அந்தக் காணி சுமார் 70 ஏக்கர் வரை காணப்படுகின்றது. 40 குடும்பங்களுக்கு மேல் சுமார் 58 ஏக்கர் காணியில் விவசாயம் செய்து வருகிறோம். இது தொடர்பில் அப்போதைய வடக்கு மாகாண ஆளுநராக இருந்த பி.எச்.எம்.சாள்ஸிடம் முறைப்பாடு செய்திருந்தோம். அந்தக் காணியில் தலா ஒரு ஏக்கரை விவசாயம் செய்ய வழங்க வேண்டும் என்றும், 18 வயதுக்கு மேற்பட்ட விவசாயம் செய்ய ஆர்வமுள்ள குடும்பம் ஒன்றுக்கு ஒரு ஏக்கர் வீதம் வழங்க வேண்டும் என்று அவர் பரிந்துரைத்திருந்தார். ஆயினும் மன்னார் மாவட்டச் செயலர் இதுவரை அதை நடைமுறைப்படுத்த வில்லை.

காணிப் பிணக்குகளைத் தீர்ப்பதாக எம்மை அழைத்த மன்னார் மாவட்டச் செயலர், காணிக்கு உரிமை கோரிய டும் பாதிரியாரையும் கலந்துரையாடலுக்கு அழைத்திருந்தார். அந்தக் கூட்டத்தில் நாம் விவசாயம் செய்து வரும் காணியை ஒரு குடும்பத்துக்கு இரண்டு ஏக்கர் வீதம் பகிர்ந்து தாருங்கள் அல்லது ஆளுநர் வழங்கிய பணிப்புரையை நிறைவேற்றுங்கள் எனக் கூறினோம். ஆனால் அவர் எதுவும் செய்யவில்லை. மன்னார் மாவட்டச் செயலரும், பாதிரியாரும் நெருங்கிய உறவினர்களாக காணப்படுவதாலேயே, நாம் நீண்டகாலமாக விவசாயம் செய்து வந்த காணிகளைப் பறித்து பாதிரியாருக்கு வழங்க மாவட்டச் செயலர் முயல்கின்றார் என்று நாம் சந்தேகிக்கின்றோம்.

மடு தேவாலயத்துக்குச் சொந்தமாக 300க்கும் மேற்பட்ட வீடுகளும், காணிகளும் உள்ள நிலையில் வாழ்வாதாரத்துக்காக விவசாயம் செய்யும் காணியை தமக்குத் தர வேண்டும் எனக் கேட்பது நியாயம் அல்ல. இறைவனின் பெயரைப் பயன்படுத்தி எமது வாழ்வாதாரக்காணியைக் கேட்பதை ஏற்றுக்கொள்ள முடியாது- என்றனர்.

இது தொடர்பில் மன்னார் மாவட்டச் செயலரைக் கேட்டபோது, அந்தப் பகுதியில் விவசாயம் செய்யும் 10 பேருக்கே காணிகள் இல்லை. நாம் 27 பேருக்கு ஓர் ஏக்கர் வீதம் காணி வழங்க முற்பட்டபோது அவர்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை - என்றார். (எ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவை காட்சிப்படுத்தி அரசியல் செய்வது அசிங்கம்

## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



கொழும்பு, நவ.2

மஹிந்த ராஜபக்சவை காட்சிப்படுத்திக்கொண்டு சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியால் முன்னெடுக்கப்படும் 'ஒன்றாக மீண்டெழுவோம்' எனும் வேலைத் திட்டத்தை நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் முக்கியஸ்தரும், அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியால் களுத்துறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம் நடைபெற்ற நாளில் நான் வெளிநாடு சென்றிருந்தேன். அதில் பங்கேற்கவில்லை.

கடைசியாக ஆராச்சிகட்டுவையில் நடைபெற்ற கூட்டத்துக்குச் சென்றிருந்தேன், அண்ணன் பிரசன்ன கூட்டத்தில் உரையாற்றுகின்றீர்களா என நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த என்னிடம் வினவினார்.

அதற்கு நான் உடன்படவில்லை. 'மீண்டெழுவோம்' வேலைத்திட்டத்துக்கு நான் எதிர்ப்பு என வெளிப்படையாகக் கூறினேன். ஏனெனில் மஹிந்த ராஜபக்சவால்தான் நாம் சுதந்திரமாக நடமாடுகின்றோம். எனவே, அரசியலில் இருந்து அவர் கௌரவமாக விடைபெறு வதற்கு இடமளித்திருக்க வேண்டும். அதை நாம் செய்யவில்லை. எதற்காகமீண்டும்அவரைக்கொண்டு வரவேண்டும் என்பதே எனது வாதம். நாமல் ராஜபக்சவிடமும் நான் இதையே குறிப்பிட்டேன்.

அதேவேளை, நாட்டைப் பொறுப்பேற்காமல் தலைவர்கள் பின்வாங்கினார்கள். ரணில் விக்கிரமசிங்க துணிவுடன் பொறுப்பேற்றார். எனவே, அவரின் காலை வாருவதற்கு நாம் தயாரில்லை - என்றார். (ஏ-44)

# பஸில் அமெரிக்கா பறந்ததால் பொதுஜன பெரமுன சிதறியது

## கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, நவ. 2

அரசியல் செய்ய முடியாத நிலையில் பஸில் அமெரிக்கா நோக்கிப் பறந்துவிட்டார். அதனால் சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி, சிதறு தேங்காய் உடைப்பது போல சிதறியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி சிதறியுள்ளதால், அதிருப்தி நிலையில் உள்ளவர்கள் எம்முடன் இணைவார்கள். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளைக் காக்க நாம் எதையும் செய்வோம் என்பது அனைவரும் அறிந்த விடயம். மக்கள் ஆணையைக் காக்கவே நாம் அமைச்சுப் பதவிகளை இழந்தோம். மாறாக சலுகைகளுக்காக அரசியல் நடத்துவது கிடையாது - என்றார். (ஏ-14,இ)

# தரம் குறைந்த உரம் விநியோகிக்கத் தடை

## உர நிறுவனங்களுக்கு அரசாங்கம் எச்சரிக்கை



கொழும்பு, நவ. 2

பெரும்போக விவசாய நடவடிக்கைகளுக்காக தரம் குறைந்த இரசாயன உரங்களை விநியோகிக்கும் உர நிறுவனங்களுக்குத் தடை விதிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என கமத்தொழில் மற்றும் வனஜீவராசிகள், வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இரசாயன உரங்களைத் தயாரிக்கும் அனைத்து உர நிறுவனங்களையும் விவசாய அமைச்சுக்கு அழைத்து கலந்துரையாடப்பட்டது. இதன்போது விவசாயிகளுக்காக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. உலக வங்கியின் 110 மில்லியன் அமெரிக்க டொலர் துரித கடன் திட்டத்தின் கீழ் 13 ஆயிரம் தொன் யூரியாவின் ஒரு பகுதி கடந்த 28 ஆம் திகதி விவசாய அமைச்சிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் நெற் பயிர்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு 50 கிலோகிராம் நிறையுடைய யூரியா மூட்டையை 10 ஆயிரம் ரூபாவுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அத்துடன் தரம் குறைந்த இரசாயன உரங்களை விநியோகிக்கும் உர நிறுவனங்களுக்குத் தடை விதிக்கப்படும் என்று அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது - என்றார். (ஏ-14,இ)

# மருந்துகளுக்கும் விலைச்சூத்திரம்

## தனியார் மருந்தக உரிமையாளர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, நவ.2

இறக்குமதி செய்யப்படும் சில மருந்துகளின் விலை 300 முதல் 400 வீதம் அதிகரித்துள்ளதால் மருந்துகளுக்கான விலைச் சூத்திரமொன்றை அறிமுகப்படுத்தவேண்டும் என்று தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சந்தன கங்கந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

விலைச் சூத்திரத்தை விதிப்பது மருந்து அதிகாரசபையால் மேற்கொள்ளப்படவேண்டும். அதற்காக சுகாதார அமைச்சர் மருந்துகள் அதிகாரசபை அதிகாரிகளை சந்தித்து வேண்டுகோள் விடுத்தபோதும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் கங்கந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது சுமார் ஆயிரத்து 200 வகையான மருந்துகள் உள்ளன. ஆனால் 100 மருந்துகளுக்கு மட்டுமே விலைக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. மருந்துப் பொருள்களின் விலையை 29 வீதம் மற்றும் 40 வீதத்தால் இரண்டு தடவைகள் அதிகரிக்க அரசாங்கம் அனுமதித்ததையடுத்து மருந்துகளின் விலை 81 வீதத்தால் அதிகரித்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட சில மருந்துகளின் விலை 300 முதல் 400 வீதம் வரை அதிகரித்துள்ளது.

இறக்குமதியாளர், மொத்த விற்பனையாளர் மற்றும் சில்லறை விற்பனையாளர் ஆகிய மூன்று தரப்பினரின் உடன்படிக்கையின் அடிப்படையிலேயே மருந்து விலைத் தீர்மானம் மேற்கொள்ளப்படவேண்டும். ஆனால் அதைப் பொருட்படுத்தாமல் இறக்குமதியாளர்கள் மருந்தின் விலையை அதிகரிக்கின்றனர் - என்றார். (ஏ-இ)

# ஆளும் கட்சி எம்.பிக்களுக்கு கடும் உத்தரவு

கொழும்பு, நவ.2

வரவு - செலவுத் திட்ட கூட்டத்தொடரின்போது ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்டாயம் நாடாளுமன்றத்துக்கு சமுகமளிக்கவேண்டும் என பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அவசர மற்றும் மருத்துவ தேவைகளைத் தவிர ஏனைய காரணங்களுக்காக வெளிநாடு செல்வதற்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போதே இதுதொடர்பான யோசனை பிரதமரால் முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதீட்டு கூட்டத்தொடரின்போது வெளிநாடு செல்லக்கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது. வரவு - செலவுத் திட்ட கூட்டத்தொடர் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகி டிசெம்பர் 8 ஆம் திகதி வரை நடைபெறும். (ஏ-44)

# சிற்றுண்டிகள் சிலவற்றின் விலை குறைப்பு

கொழும்பு, நவ. 2

சிற்றுண்டிகள் சிலவற்றின் விலை குறைக்கப்படவுள்ளது என்று சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சம்மேளனம் அறிவித்துள்ளது.

அதன்படி ரோல்ஸ், பரோட்டா, முட்டைரொட்டி, மரக்கறிரொட்டி ஆகியவற்றின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. தேநீர் 30 ரூபாவுக்கும் ஒரு பால் தேநீர் 100 ரூபாவுக்கும் விற்பனை செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது என்று சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார். (ஏ-14,இ)

# போராட்டம் செய்வோர் தேசத் துரோகிகளாம்

## வஜீர கூறுகின்றார்

நாடு மீண்டெழுந்துவரும் நிலையில், போராட்டங்களுக்கு அழைப்பு விடுப்பவர்கள் தேசத் துரோகிகளாவர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அரசியல்கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகள் இணைந்து கொழும்பில் இன்று நடத்தத் திட்டமிட்டுள்ள போராட்டத்தைச் சாடும் வகையிலேயே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கொழும்பில் மீண்டும் அணிதிரளவேண்டும் என்று மக்களுக்கு சில குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். இவர்கள் தேசத்துரோகிகள். எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் ஜனாதிபதி உள்ளிட்டோர் இந்நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கினால் அவர்களும் தேசத்துரோகிகள்தான். சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வர ஆரம்பித்துள்ள நிலையில், பேரணிகளை நடத்தி, குழப்ப நிலை உள்ளது என்பதைக் காண்பிக்கவே இவர்கள் முற்படுகின்றனர்.

ஜனநாயகத்தை மதிக்கின்றோம். அதற்காக ஜனநாயகத்தை துஷ்பிரயோகம் செய்வதற்கு இடமளிக்கக் கூடாது. நாடு வங்குரோத்து அடைந்துள்ள நிலையில் அதனை மீட்பதற்கு பொறுப்புடன் செயற்பட வேண்டும். சுதந்திரம் இருக்கின்றது. அதற்காக எல்லைமீறிச் செயற்படக்கூடாது. எனவே, தேசத்துக்காக நாம் ஒன்றிணைவோம். வீதிகளில் அலைவதால் பிரச்சினைகள் தீராது. போராட்டம் நடத்துவதால் கிடைக்கப் போவது எதுவுமில்லை - என்றார். (ஏ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்பகப் புற்றுநோய் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுங்கள்

## மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுரை

**மன்னார், நவ. 2**



**பெண்களுக்கு ஏற்படும் நோய்களில் மிக அவதானமாக இருக்க வேண்டியது மார்பகப் புற்றுநோயாகும். பெண்கள் தாய்ப்பால் கொடுக்காமல்விட்டால் மார்பகப் புற்றுநோய் ஏற்படும் சாத்தியக்கூறுகள் அதிகம்.**

இவ்வாறு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகளாவிய ரீதியில் ஒக்ரோபர் மாதம் மார்பகப் புற்றுநோய் மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதுதொடர்பான விழிப்புணர்வு கருத்தமர்வுகள் கடந்த மாதம் இடம்பெற்றன.

ஒவ்வொரு பெண்களும் வீடுகளிலேயே சுயபரிசோதனை செய்யும்போது மார்பகங்களில் ஏதேனும் கட்டிகள், தோல்களில் வித்தியாசம், அக்குள்களில் கட்டிகள் போன்று தென்படின் உடன் மருத்துவப் பரிசோதனைக்கு உட்பட வேண்டும்.

பெண்களை மார்பகப் புற்று நோய் அதிகம் தாக்குவதால் ஆரம்ப நிலையில் அவற்றைக் கண்டு பிடித்துவிட்டால் மார்பகங்களை அகற்றாமல் புற்றுநோயைக் குணப்படுத்திக்கொள்ளமுடியும்.

மார்பகப் புற்று நோய் ஏற்படுவதற்கு முக்கியமாக பரம்பரைக் காரணி காணப்படுகிறது. அதைவிட திருமண வயது தாமதமாகுதல், குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்காமல் விடுதல், ஆரோக்கியம் இல்லாத உணவுகள், உடற்பயிற்சி இன்மை ஆகியவற்றுடன் இதய நோய்க்கு உண்டான காரணிகளும் மார்பகப் புற்றுநோய்கள் வருவதற்கான வாய்ப்புகளாக அமைகின்றன- என்றார். (ச-213)

# கனகாம்பிகைக் குளம் வான்பாயும் சாத்தியம்

## இடர் முகாமைத்துவப் பிரிவு எச்சரிக்கை

கிளிநொச்சி, நவ. 2

கனகாம்பிகைக் குளத்தின் நீர்மட்டம் படிப்படியாக அதிகரித்து வருவதால் கனகாம்பிகைக் குளத்தின்கீழ்ப் பகுதியில் வசிக்கும் இரத்தினபுரம், ஆனந்தபுரம் மக்கள் அவதானமாக இருக்குமாறு கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

தற்போது பெய்துவரும் மழைகாரணமாக கனகாம்பிகைக் குளத்தின் நீர்மட்டம் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. தொடர்ச்சியாக மழை பெய்தால் கனகாம்பிகைக் குளம் வான் பாய்வதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன.

கனகாம்பிகைக் குளத்தின் கீழ்ப் பகுதியில் வசிக்கும் இரத்தினபுரம், ஆனந்தபுரம் மக்கள் மற்றும் பரந்தன், உமையாள்புரம் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

வெள்ளம் ஏற்படாத வகையில் அருகிலுள்ள கழிவு வாய்க்கால்களை சுத்தம் செய்து நீர் வழிந்தோடக் கூடியவகையில் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கணினிமயமாக்கப்படும் யாழ். சமுர்த்தி வங்கிகள்

யாழ்ப்பாணம், நவ.2

யாழ்.மாவட்டத்திலுள்ள சமுர்த்தி வங்கிகளைக் கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் சமுர்த்தித் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணம், கோண்டாவில், ஆவரங்கால், உடுப்பிட்டி ஆகிய சமுர்த்தி வங்கிகளை கணினிமயப்படுத்த ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது தென்மராட்சி பிரதேசத்தின் சாவகச்சேரி, கொடிகாமம், வரணி ஆகிய சமுர்த்தி வங்கிகளை கணினிமயப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை காலமும் பதிவு முறை அடிப்படையில் சமுர்த்தி வங்கிகள் சேவைகளை வழங்கி வந்தன. தற்போது வங்கி நடவடிக்கைகளை கணினிமயப்படுத்துவதனால் மக்கள் சிரமமின்றி சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

# வடக்கில் மழையுடனான வானிலை தொடரும்

யாழ்ப்பாணம், நவ. 2

இலங்கையை அண்மித்துள்ள வளிமண்டலத் தாழ்வு நிலை காரணமாக, வடமாகாணத்தில் மழையுடனான வானிலை மேலும் தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்று வெளியிடப்பட்ட வானிலை அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

வடக்கு, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையில் மழை பெய்யும். மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், ஊவா மற்றும் வடக்கு மாகாணங்களில் சில இடங்களில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழையும் ஏனைய இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழையும் எதிர்பார்க்கலாம். மழை பெய்யும் வேளையில் காற்றின் வேகம் வடமேற்கு திசையில் இருந்து மேற்குத் திசையில் மணிக்கு 20-30 கிலோமீற்றர் வரை வீசும். புத்தளத்திலிருந்து காங்கேசன்துறை மற்றும் முல்லைத்தீவு ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோமீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும்.

இலங்கையை அண்மித்த வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை, காங்கேசன்துறை, புத்தளம் ஊடாக கொழும்பு வரையான கடற்பரப்புகளில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான வாய்ப்புகள் அதிகம்.

எனவே, இடியுடன் கூடிய மழை, காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் - என்றுள்ளது. (எ-14)



# மாட்டை இறைச்சியாக்கிய நான்கு பேர் கைதாகினர்!

கிளிநொச்சி, நவ. 2

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சிப் பகுதியில் மாட்டை இறைச்சியாக்கிய குற்றச்சாட்டில் நான்கு சந்தேகநபர்கள் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று இராமநாதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேய்ச்சலுக்காகக் கட்டி விடப்பட்ட மாட்டை வெட்டி அதன் வயிற்றிலிருந்த கன்றுக்குட்டியை எடுத்து வீசிவிட்டு மாட்டின் இறைச்சிகளைக் கொண்டு சென்றனர்.

இது தொடர்பாக இராமநாதபுர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவலுக்கமைய நான்கு சந்தேகநபர்களைக் கைதுசெய்தனர். அத்துடன் மாட்டின் எச்சங்களையும் பொலிஸார் மீட்டனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இராமநாதபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (எ-14,113)

# நினைவுப்பேருரையும் மர நடுகையும்

யாழ்ப்பாணம், நவ. 2

கலாநிதி க.கனகராசாவின் 95 ஆவது நினைவுப் பேருரையும் யாழ்.மாவட்ட சாரணர் சங்கத்தின் மர நடுகையும் யாழ்ப்பாணம் பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை மாலை 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட சாரண ஆணையாளர் இ.தவகோபால் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் கலந்துகொள்ளவுள்ளார். (எ-14)

# நீதியமைச்சின் ஏற்பாட்டில் கிளி.யில் நடமாடும் சேவை

கிளிநொச்சி, நவ.2

கிளிநொச்சி மாவட்டத்தில் இழப்பீடுகள் மற்றும் இறப்பு, காயமடைந்தவர்களுக்கான கொடுப்பனவு, இந்தியாவில் இருந்து இலங்கைக்கு மீளவும் வந்துள்ள மக்கள் தமது ஆவணங்கள் பெறுவதை இலகுபடுத்தல் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் நடமாடும் சேவை கிளிநொச்சியில் அமைந்துள்ள திறன் விருத்தி வளாகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு



அமைச்சின் ஏற்பாட்டில் இந்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ச, அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா, அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் குமாரி, இழப்பீடுகளுக்கான பணிப்பாளர் நாயகம் எஸ்.எல்.எம். ஹசீம் மற்றும் மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், துறை சார் அதிகாரிகள், நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண மரநடுகை மாதம் நவம்பர் 2022

“ நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்” –வாரன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)

## வெளிவருமா மறைகரங்கள்?

வடக்கு மாகாணத்துக்கு பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக வந்திருந்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச வடக்கு மாகாணத்தின் போதைப் பொருள் பாவனை தொடர்பில் விசேட கவனம் செலுத்தியிருந்தார். வடக்கு மாகாண ஆளுநருடன் இணைந்து துறைசார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்த அவர் பல்வேறு பணிப்புரைகளையும், ஆலோசனைகளையும் வழங்கியிருக்கிறார்.


வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் பாவனை இளையோர் மத்தியில் கிளைபரப்பியிருக்கும் நிலையில் அதைக் கட்டுப்படுத்தவேண்டியதே எம்முன்னுள்ள முதற்கடமை. அந்தவகையில் நீதி அமைச்சர் மேற்கொண்டிருந்த நடவடிக்கைகளும் வரவேற்புக்குரியதே. ஆனால், வடக்கை வியாபித்திருக்கும் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த இவை போதுமானதா? என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

நாட்டின் எந்தப் பாகத்திலும் இல்லாதவாறு பெரும் படைக்குவிப்பு உள்ள வடக்கு மாகாணம் நாட்டுக்குப் போதைப் பொருள் நுழையும் வாயிலாக மாறியுள்ளது என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச கூறுகின்றார். அது எவ்வாறு சாத்தியமாயிற்று என்பதையும் நாம் சிந்திக்கவேண்டியது அவசியம். வடக்கு மாகாணத்தில் நடக்கும் போதைப் பொருள் வியாபாரம் பெரும் மறை கரங்களின் உதவியுடனே நடைபெறுகின்றது என்பது சாதாரண ஒருவருக்கே தெரியும் நிலையில், பொலிஸாருக்கும், படைத்தரப்புக்கும் அது தெரியாதிருக்க வாய்ப்பில்லை.

போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்குச் சிகிச்சைகள் வழங்கப்படும் அதேநேரம், போதைப் பொருள் விநியோகத்தைக் கட்டுப்படுத்தினால் மட்டுமே இளையோரை அதிலிருந்து மீட்க முடியும் என்பது துறைசார் நிபுணர்களின் கருத்தாக இருக்கின்றது. போதைப் பொருள்கள் சாதாரணமாகக் கிடைக்கும் நிலைமை இருந்தால், சிகிச்சைகளின் பின்னர் சமூகத்துடன் இணைக்கப்படுவோர் மீண்டும் போதைக்கு அடிமையாகும் நிலைமையே இருக்கும் என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் விற்பனை செய்யும், போதைப் பொருள்களைக் கடத்தும் மறைகரங்களை அழிக்காது விட்டால் போதைப் பொருள் ஒழிப்பு என்று மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைகளும் பயன்தரப் போவதில்லை. போதைப் பொருள் சிறு வியாபாரிகளைப் பொலிஸார் கைது செய்வதால் போதைப் பொருள் விற்பனையும் குறைந்துவிடப் போவதில்லை. மாணவர்களினதும், இளையோரினதும் கைகளுக்குப் போதைப் பொருள்கள் இலகுவாகக் கிடைப்பதைத் தடுக்கும் வரையில் போதைப்பொருள் ஒழிப்பு என்பது சாத்தியமாகப் போவதில்லை.

போதைப் பொருளை ஒழிக்கவேண்டும் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச விரும்புவரானால் முதலில் போதைப்பொருள் முதலாளிகளை சட்டத்தின் முன்பாக நிறுத்துவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும். பணம் மற்றும் அரசியல் பலத்தின் பின்பாக இருந்தவாறு சமூகத்தைச் சீரழிக்கும் நபர்களைச் சட்டத்தின் முன்பாக எப்போது கொண்டுவர முடிகின்றதோ அப்போதுதான் போதைப் பொருள் ஒழிப்பு என்பது சாத்தியமாகும். ஆனால், இலங்கை போன்ற நாட்டில் அது சாத்தியப்படுமா என்பது மில்லியன் டொலர் கேள்வியே.




# ஆறு மாதத்துக்குள் அரச கடன் உயர்வு!

**கொழும்பு, நவ. 2**

**இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் அரசாங்கத்தின் கடன் 6675 பில்லியன் ரூபாவால் உயர்வடைந்துள்ளது என்று மத்திய வங்கியின் அண்மைய அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:- கடந்த 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அரசாங்கத்தின் மொத்தக் கடன் தொகை 17589.4 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இந்தக் கடன் தொகையானது இந்த ஆண்டு ஜூலை மாத இறுதியில் 24264.4 பில்லியன் ரூபாவாக உயர்வடைந்துள்ளது. அரசாங்கத்தின் மொத்த கடன்களில் உள்நாட்டுக் கடன் தொகையானது இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 11097.2 பில்லியன் ரூபாவிலிருந்து 12738.5 பில்லியன் ரூபாவாக உயர்வடைந்துள்ளது. வெளிநாட்டுக் கடன் தொகையானது இந்தக் காலப் பகுதியில் 17589.4 பில்லியன் ரூபாவிலிருந்து 24264.4 பில்லியன் ரூபாவாக உயர்வடைந்துள்ளது. (எ-14)

# வெளிநாட்டுப் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பை உடன் வழங்குக

## பிரதமருக்கு செல்வம் எம்.பி.கடிதம்

மன்னார், நவ. 2

வெளிநாட்டில் கல்வி கற்று பட்டதாரிகளாக இருக்கும் எமது நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தை உடன் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பிரதமர் தினேஸ் குணவர்த்தனவுக்கு கடிதமொன்றை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது: வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற இளங்கலைப் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குமாறு நான் பலமுறை நாடாளுமன்றத்தில் பேசியுள்ளேன். எனினும் கடந்த காலத்தில் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் பட்டதாரிகள் பெரும் நெருக்கடிக்கும் மனஉளைச்சலுக்கும் உள்ளாகியுள்ளனர். இவ்வாறான நிலையில் இது தொடர்பில் கவனம் செலுத்தி வெளிநாட்டில் கற்று பட்டதாரிகளாக வந்திருக்கும் இலங்கையருக்கு பட்டதாரிக்கான வேலைவாய்ப்பு வழங்குவதற்கு தற்போது பிரதமர் முன்வந்திருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த முடிவு இளைஞர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது. எடுக்கப்பட்ட இந்த முடிவுக்கு பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கும் பட்டதாரிகள் சார்பிலும் நன்றி கூறுவதோடு திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது. (எ-14,60,213)

நாளை 03.11.2022 வியாழக்கிழமை ஐப்பசி 17
சுபநேரம் : 07.34 - 09.04
ராகுகாலம்: 01.04 - 03.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால்மாப் பொதிகள் திருடிய வெளிநாட்டவருக்கு சிறை

13 பால்மாப் பொதிகளைத் திருடிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட வெளிநாட்டவருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கடூழிய சிறைத் தண்டனை விதித்து கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அத்துடன் ஆயிரத்து 500 ரூபா தண்டமும் அறவிட வேண்டும் என்றும் கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே உத்தரவிட்டார்.

கொழும்பிலுள்ள தனியார் வர்த்தக வளாகத்தில் ஐக்கிய அரபு இராச்சிய பிரஜையான குறித்த சந்தேகநபர் பால்மாப் பொதிகளை திருடினாரென கொம்பனித்தெரு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (ச-இ)


## மரண அறிவித்தல்

பிறப்பு 06.12.1943 **திருமதி புகனேஸ்வரி வேலாயுதம்** இறப்பு 30.10.2022



மாதகலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புகனேஸ்வரி வேலாயுதம் 30.10.2022 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னார் காசிநாதர் நாகரத்தினத்தின் அன்பு மகளும், அமரர் சின்னையா வேலாயுதத்தின் அன்பு மனைவியும் சின்னையா பத்தினிப்பிள்ளையின் அன்பு மருமகளும், பாலசுப்பிரமணியம் தெய்வநாயகியின் அன்புச் சகோதரியும், இந்திராணி (Swiss), சற்குணராணி (France), கஜேந்திர ராணி (ஆசிரியை, யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.), ஆனந்தரூபன் (France) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஷர்மினி, அஞ்ஜெலிக்கா, அனோஜன், சிவாணி, மிதுன், ஷரண், அபிராமி, ஆதித்தியன், அஸ்மிதா, ஆரணியன் ஆகியோரின் அன்புத் பேர்த்தியும், தியானாவின் அன்பு பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2022) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, இறுதி நிகழ்வு மாதகல் போதி மயானத்தில் நடைபெறவுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மாதகல் கிழக்கு, மாதகல்.**

(CR 7042) 1-6

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 12 . 1931



மறைவு 01 . 11 . 2022

## கதிரவேல் தங்கமலர்

அல்வாய் மேற்கு பூமாஞ்சோலையை பிறப்பிடமாகவும் அரியாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேல் தங்கமலர் அவர்கள் நேற்று (01.11.2022) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா-இலக்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கதிரவேல் (பவளம்) அவர்களின் அன்பு மனைவியும் ரஞ்சன் (ஓய்வுபெற்ற ஐக்கிய நாடு சபை / ஐரோப்பிய ஒன்றிய அதிகாரி), ரதி, லதா, உதயகுமார் (உரிமையாளர்-Asian Foodcity நோர்வே), சாந்தகுமார் (குடிசார் பொறியியலாளர், நோர்வே.), Dr.விஜயகுமார் (MOH- திருகோணமலை), சீதா (பிரான்ஸ்), கீதா, சதீஸ்குமார் (இலத்திரனியல் பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், அனுசூயா, நாகேந்திரன் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்), காலஞ்சென்ற குலவீர சிங்கம் (இளைஞர் சேவை அதிகாரி), லக்சுமி (நோர்வே), சந்திரிக்கா (நோர்வே), சர்வேந்திரா (ஆசிரியை - திரு/சண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை), யோகலிங்கம் (Retired Deputy Director of Customs - Srilanka), கார்த்திகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற சிவபாக்கியம் (வேங்கை), வசந்தா, விஜயராசா, காலஞ்சென்றவர்களான யோகாம்பிகை, செல்லாம்பிகை, புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவபாக்கியம், தியாகராசா, காலஞ்சென்றவர்களான Dr.வல்லிபுரம், புவனேந்திரன், வன்னியசிங்கம் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆரணி (விஞ்ஞானி-TUM பல்கலைக்கழகம், ஜேர்மனி), ஸ்மிருதி (பேச்சுவழநிபுணர்), ஸ்டேவ் (Accountant - கட்டார்), மஞ்சரி (இறுதி ஆண்டு மருத்துவ பீட மாணவி - யாழ்ப்பாணம்), Dr.கீர்த்தனா, Dr.ஜிதுஸ்மன் (யாழ்.போதனா வைத்தியசாலை), சுகாசனன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), நிதர்சனா (தனியார் கல்வி நிர்வாகி) - காயத்ற (முகாமையாளர்), French market Connaissance de ceylon), சிந்தூரி (Software Engineer, Google, California (USA), நிருதி (Product Consultant, Camms), அருஷன் (Development Director, Srilanka America Chamber of commerce Nevada (USA), சாருந்தன் (Navy Military - Norway), லக்ஷிகா (Kristiania University Oslo), மைவிழி, (நோர்வே ஆர்க்டிக் பல்கலைக்கழகம்), ஈழநிலா (நோர்வே அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகம்), அருண், சியேனி (1ம் வருட மருத்துவ பீட மாணவி - கிழக்கு பல்கலைக்கழகம்), ஆகர்ஷன், சாருஸ்னி, அதிசன், ஹரிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**91, ஆசீர்வாதப்பர் வீதி,**
**அரியாலை மேற்கு,**
**யாழ்ப்பாணம்.**

**ரஞ்சன் - 0773618824**
**விஜயகுமார் - 0777732389**
**ரதி - 0771048757**
**கீதா - 0779039119**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 05 . 05 . 1969



மறைவு 01 . 11 . 2022

### அமரர் செல்வராஜா றமேஸ் (JP)

(உள்ளூராட்சி உத்வியாளர்,காரைநகர் பிரதேசசபை,
இணைப்பு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,மானிப்பாய் )

எமது ஆருயிர் நண்பனும் சக உத்தியோகத்தரும் ஆரம்பகாலமுதல் எமது சங்கத்தின் தலைவராக இருந்து அயராது உழைத்தவருமாகிய **செல்வராஜா றமேஸ்** அவர்களின் பிரிவால் பெரும் துயருற்றுள்ளோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! !சாந்தி!!!*

**உள்ளூராட்சி உதவியாளர் சங்கம்,**
**வடமாகாணம்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 12 . 1930



இறப்பு 27 . 10 . 2022

### திருமதி மிருகண்டு மங்கையர்க்கரசி (பேபி)

யாழ்ப்பாணம் நல்லூர் 2ஆம் குறுக்கு தெருவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மிருகண்டு மங்கையர்க்கரசி(பேபி) 27-10-2022 அன்று லண்டனில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற கந்தையா அன்னப்பிள்ளையின் மகளும், காலஞ்சென்ற முத்துத்தம்பி கதிராசியின் மருமகளும் காலஞ்சென்ற மிருகண்டுவின் மனைவியும், தபோரஞ்சனியின் அன்புத் தாயும், ஶ்ரீதரனின் அன்பு மாமியும், காலஞ்சென்ற இராசநாயகம், காலஞ்சென்ற கனகநாயகம் மற்றும் மகாதேவியின் அக்காவும் காலஞ்சென்ற சோதி, வசந்தராணி, சாம்பசிவம், பூலோகரம்பை மற்றும் மகாதேவன் ஆகியோரின் மைத்துனியும், ஜசின் பிருந்தாயினி, கரன் அனிஷாவின் பேர்த்தியும், ஆர்யா, அதரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் காயத்தரி, அனுராதா, லாஈசா, கௌதமன், ராகுலன், பகீரதி, காலஞ்சென்ற காந்தலக்ஷ்மி மற்றும் அன்னலக்ஷ்மி, சாந்தலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, கருணாகரன், கிருபாகரன், சுதாகரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2022) புதனகிழமை அன்று முற்பகல் 10.30 மணி முதல் அஞ்சலிக்காக Hendon Crematorium Holders Hill Road, Hendon, London NW7 1NB இல் வைக்கப்பட்டு, பிற்பகல் 1 மணியளவில் தகன கிரியைக்காக பூதவுடல் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க.மகாதேவி (London)**
**Tel : +44 7728 403964**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை



"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு." -வள்ளுவர்





# வடக்கு மாகாண பண்பாட்டு விழா!

## விண்ணுயர்ந்த எங்கள் விழுமியங்களை கண்ணாரக் களிக்கவைத்த தமிழ் விழா

கே.எஸ்.சிவஞானராஜா

மண்ணிலே வந்த பிறவியே எமக்கு வாலிதாம் இன்பமாம் என்பதைக் கண்ணிலே ஆனந்தம் பொங்குமாறு கண்டுகளிக்க வைத்த ஓர் அதிசயமே வடக்குமாகாணப் பண்பாட்டுப் பெருவிழாவாகும். என்னதான் துன்பங்கள் எம்மை வீடு வந்து வாட்டினாலும், மின்னலென அவற்றை ஓடவைக்கும் மாபெரும் சக்தி அவரவர் மண்ணுக்கே உரித்தான பண்ணார்ந்த கலைவார்ப்புகளுக்கே உண்டு. அந்த வகையில் பண்ணார்ந்த கலை பொக்கிஷங்களை அள்ளித்தந்த பண்பாட்டுப்பெருவிழா வடக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால், கடந்த சனிக்கிழமை காலை, நெல்லியடி மத்திய கல்லூரியில் மிகப் பிரமாதமாக அரங்கேற்றப்பட்டது. நன்கு திட்டமிடப்பட்டு எந்தவொரு பிழைக்கும் இடமளிக்காமல், கண்ணூறுபடாதவாறு முன்னுதாரணமாயமைந்த ஒரு காத்திரமான விழாவாக அமைந்து வெற்றிகொண்டது.

### உயிரோட்டமான ஊர்வலப் பவனி

கணித மூளைகள் நிரம்பிய பூமி வடமராட்சியாகும். கணக்கு வழக்கு நிறைந்த கலைகளுக்கு வரமான பூமியாம் நெல்லியடியிலே பாரம்பரிய பென்னாம்பெரிய ஆறு ஊர்வலமாய் நகர்ந்து பெருவீதி இரு மருங்கையும் நனைத்து நினைக்க வைத்தது. அடேயப்பா! இந்திர உலகமோ இது மந்திர சக்தியோ! என ஆச்சரிக்க வைத்த மகிமையாக கவினுறு ஊர்வலம் பார்ப்பவர்களது கண்களைக் கொள்ளையடித்தது. கீர்த்தி மிகு ஆன்மிக அவதார மூர்த்திகள், மயிலாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம், காவடி ஆட்டம், குடம் ஊதற்கும்மி, வாள் நடனம், சுளகுநடனம், பாம்பு நடனம், கோலாட்டம், உடுக்காட்டம், மத்தொனிப் பாடலாடல், கிராமிய நடனம், ராஜ கம்பீர இசைநாடக பாத்திர முன்னோடிகள், கம்படி கரவடி வில்லடி விரலடி, ஓலைக்குடில் ஊர்திகள், பொம்மலாட்டம், திண்ணைக் குடில், மயானம் தரு சுடலை ஞானப் பாடல் காட்சி, குரலோசை, குழலோசை, யாழோசை, பறையோசை, மங்கல வாத்திய சங்கமப்பிரவாகம், உடுக்கடிப்பாடல், இறையோசை, மூவின கலாசாரப் பண்பாட்டுச் சுப மங்கள தவஞானிகள், பெரும்புலவர்கள், இலக்கிய மாந்தர்கள், நடன நாடக விற்பன்னர்கள் என அழகு சொட்டும் நிலபுலகலாதாரிகள் ஊர்வலமாய் உயிரோட்டமாய் விதிகளைத் தம்வசப்படுத்தினதாய் விரவி வியக்க வைத்தனர்.

மேலும் மெய்சிலிர்க்கும் படியாகத் தென்னங்கீற்றுக்களினாலும் மஞ்சள் குருத்துப்பச்சை, ஆழமான பச்சை ஓலைகளினால் பின்னியவாறு கச்சிதமாக வடிவமைக்கப்பட்ட தோரண வாயில்களும், திரிகரண வர்ணங்களினால் இடப்பட்ட கண்ணிறைந்த கோலங்களும், விசாலமான தெணியான் அரங்கிலே பின்னியும் நெய்தும் வண்ணமாய் யாழொடு சின்னமாய்ப் பொலிந்து மன்னிய அழகுமிளிர் வண்ண வடிவழகுத் தோரணமும் வந்தோரைப் பந்தமோடு சொந்தம் கொண்டாடின. தமிழில் சிறந்த அறிவிப்பாளர்களின் பரீச்சயமான விடயதானங்கள் மூலம் விருந்தினர்களும், பிரமுகர்களும், கலைஞர்களும், ஆர்வலர்களும் மக்களும் விழா மண்டபத்தில் நுழைந்தனர். அங்கு காணப்பட்ட கல்லூரியின் மகுடவாசகம் எமக்கு தெம்பையும், தொன்மையையும் எடுத்தியம்பின. அது தான், பொன் எழுத்துக்களால் வரையப்பட்ட 'அறிவு ஒளிர சால்பு சிறக்க' என்பதாம்.

### கலைச் சங்கமங்கள்

பிரதம விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்த நிகழ்வு மண்டபத்தை தேவ சபை ஆக்கியது. தொடர்ந்து கரவெட்டி குருஷேத்திர நடனாலயம் வழங்கிய வரவேற்பு நடனம், பாவ ராக தாள பரத சுவை சொட்டியது. இனிதான வரவேற்புரையை பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் ஸ்ரீமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா மெருகேற்றி வரமாக்கினார். சாஹித்திய ரத்னா கந்தையா நடேசு அரங்கத் திறப்புரையை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் த.அஜந்தகுமார் மிகவும் கனதியாக மண்டபத்தை வசமாக்கி, தெணியானின் எழுத்து வார்ப்புகளுக்கு அழியாப்புகழ் ஈட்டினார். பத்துக்கும் மேற்பட்ட நாவல்களும், 180க்கும் மேற்பட்ட சிறுகதைகளும், 100க்கும் மேற்பட்ட கட்டுரைகளும் அதி உயர் விருதுக்குரியவை என்பதை காலம் எழுந்து காத்திருந்து தட்டிக்கேட்கும். அடுத்து இடம்பெற்ற தலைமையுரையை கல்வி அமைச்சின் செயலாளர் தான் பிறந்து வளர்ந்து ஆளாகிய தமது சொந்த மண்ணில் இந்த விழா நடைபெறுவதையிட்டு புளகாங்கிதம் கொண்டு பேசி, யாவரையும் கவர்ந்து கொண்டார். மண்டபம் அதிர, கண்டவர் குளிர, இருந்தவர் நிமிர, கலை ஆர்வலர்கள் தமை மறக்க சிவதாண்டவமானது விண்ணவர்களையும் நெல்லியடிக்கு வரவழைத்தது. சிவதாண்டவக் குழுவினராகிய கரைச்சி சிவகலை நாட்டியாலயா மாணவிகள் எம்மை இமயமலைச்சாரலுக்கு அழைத்து நீடித்த ஆயுள் தந்தனர். அந்த நடனம் அற்புதம், அதிசயம், ஆனந்தம் அளித்தது. தொடர்ந்து வவுனியா தெற்கு மடுகந்த கலாசார மத்திய நிலையத்தால் தயாரித்து அளிக்கப்பட்ட சிங்கள கிராமிய சுளகுநடனம், இரம்மியமோடு கலைநயம் கூட்டியது. அத்துடன் மன்னார் கலார்ப்பண நாட்டியப்பள்ளி மாணவர்களின் கிறிஸ்தவப் பண்பாட்டு நடனமும், மனதைக் கவ்வி இழுத்தது. முல்லைத்தீவு நுண்கலைக் கல்லூரி, கண்ணகி கலாமன்றம் வழங்கிய பாம்பு நடனம் சபையோரைத் தீண்டியதோ என்னவோ சபையினர் அச்சங் கொண்டனர். ஆனால் அப்படி ஒன்றும் நடக்கவில்லை.

### முத்தான விருதுகள்

நிகழ்வில், கலைக்குரிசில் விருதும், இளங்கலைஞர் விருதும், சிறந்த நூற்பரிசும் மொத்தமாக 40 கலைஞர்களுக்குப் பேறாகிப் புண்ணியமாகின. 'வடந்தை' நூலுக்கான தொகுப்பாசிரியர் உரையை, தகைசால் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பொறுப்பாகவும், பெறுமதியாகவும், 2023ஆம் ஆண்டில் வடந்தைக்கு உடந்தையாகவும் பேசியது மட்டுமல்ல, அதற்கான முயற்சிகளை இப்போதே ஆரம்பிக்குமாறு வேண்டியும் உரையாற்றினார். சிறப்புச் சொற்பொழிவாக, வவுனியா தமிழ்ச்சங்க அமைப்பாளர், தமிழருவி த.சிவகுமாரனின் 'பண்பாட்டுத்தமிழ்' ஊற்றெடுத்து மண்டபத்துள் ஆறாகிப் பெருக்கெடுத்து ஓடியது. எல்லை மீறிய காதல் கொண்ட ஈழத்தின் தமிழிசை அரங்க நிகழ்வு, மூத்த இசைவிரிவுரையாளர் த.றொபேர்ட்டால் நம்மவர்க்கு மகிமை சேர்க்கப்பட்டது. தொடர்ந்து ஒஸ்மானியக் கல்லூரி மாணவர்களது 'றபான்' நடனமும் பருத்தித்துறைப் பிரதேச கலைஞர்களின் இசைநாடகமும் மண்டபத்தைக் காப்பாற்றி விடைகொடுத்தது. நன்றியுரையும் தமிழ்மொழி வாழ்த்தும் மனதில் நிறைந்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்புக்கு நேரம் ஒதுக்குவது சாலச்சிறந்தது.

சி.நற்குணலிங்கம்
நெல்லியடி.

மக்களின் பயன்பாட்டிலுள்ள நூல்களின் இருப்பிடம் நூலகமாகும். நூல்களை அகத்தே கொள்ளும் இடமாகவும், வாசிப்பு மற்றும் தேடலுக்கு மிகவும் பொருத்தமான இடமாகவும், சுயகற்றல் சூழலை உருவாக்கும் தளமாகவும் இது விளங்குகின்றது. இது அறிவுக் கண்களைத் திறக்கும் திறவுகோலாகும். நூலகமென்பது கல்வி அறிவையும், நற்பண்புகளையும் கொண்ட, நல்ல சமுதாயத்தை உருவாக்கும் ஓர் இடமாகும். சில வாசிப்புப் பிரியர்கள் தமது வீடுகளிலும் நூலகத்தை அமைத்துள்ளனர். நூல்களைக் கொண்ட நூலகங்கள் காணப்படுவது முக்கியமானதல்ல அவற்றின் உச்சப் பயன்பாட்டை மக்கள் அனுபவிப்பதுதான் முக்கியமாகும். ஆனால், தற்போது இளம் சந்ததியினர் நூலகம் சென்று வாசிப்பது மிகவும் அருகிவருகின்றது. இது எதிர்காலத்துக்கு ஒரு சாபக்கேடாகும்.

வாழ்வின் விழுமியங்களை அறிந்து ஒழுக, கற்றலில் ஆர்வம், நடத்தை, உளப்பாங்கு, நுண்மதி, அறிவாற்றல் திறன் என்பவற்றை வளர்த்து நெறிப்படுத்த வாசிப்பு அவசியமாகின்றது. அறிதல் சிறப்புற அமைய, உலகத்தைப் பற்றிய பார்வை விரிவடைய, வாழ்க்கை மேம்பட, எதிர்காலத்தில் அன்பும் அறிவும் கொண்ட சமூகம் தோற்றம்பெற, ஒருவன் தன்னைத்தானே கண்காணித்துக் கொள்ளவும், தவறுகளிலிருந்து திருந்திக் கொள்ளவும், சிந்தனைகளை சீர்செய்யவும், மாற்றங்களை வரவேற்பதற்கும், மாற்றங்களுக்கு எம்மைத் தயார் செய்து கொள்வதற்கும், நூலகங்களைப் பயன்படுத்தி வாசிப்பை வளர்த்துக்கொள்வது சிறந்ததாகும். ஆனால் இன்று பலர் நூலகத்தின் சுகங்களை அறியாது இருக்கின்றனர்.

பதின்மவயதினர் ஒரு பருவ மாற்றத்தின் பதட்ட நிலைக்கு உட்படுபவர்களாக உள்ளனர் என்பது உளவியலாளர் கருத்து. அறிவுத் தேடலை விட இளமை தொடர்பான உணர்வு மேலோங்கியுள்ளது. இவர்களது நடத்தைகள் பொது நியமத்திலிருந்து விலகி எதிர்பார்க்கப்படும் நடத்தைக் கோலங்களிலிருந்து முரண்படுகின்றன. பாலியல் வன்புணர்ச்சி, போதைப்பொருள் பாவனை, குழுச்சண்டை, திருட்டு, ஆட்கடத்தல், மதுப்பாவனை என இன்று இளையோர் பண்பாட்டின் எதிர்நிலைகளில் அவா கொண்டுள்ளனர். அரட்டை அடித்தல், கலாசாரச் சீரழிவுகளில் ஈடுபடுதல், சமூக வலைத்தளங்களில் சண்டை போடுதல், யாரைப் பற்றியும் வம்பு பேசுதல் ஆகியவற்றுக்கு ஒதுக்கும் நேரத்தை வாசிப்புக்கு ஒதுக்குவது சாலச் சிறந்ததாகும்.

வாழ்நாளில் நூலகம் சென்று வாசிப்புப் பழக்கத்தை மேற்கொள்ளாதவன் அறியாமையினால் உழல்வான். நூலகப் பயன்பாட்டை புறம்தள்ளுவது அறியாமையை எடுத்துக் காட்டுகின்றது என்பது கல்விமான்களின் கருத்தாகும்.

பொருத்தமான தகவல் வளம், பொருத்தமுடைய வாசகரைச் சென்றடைய வேண்டும் என்பது நூலக விதியாகும். புத்தகங்களைத் தொலைத்துவிட்டு அறிவைத் தேடலாமா? ``நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்`` - என்றார் ஆபிரகாம் லிங்கன். ``உண்மையான வாசகன், வாசிப்பதை முடிப்பதே இல்லை`` - என்கிறார் ஆஸ்கார் வைல்ட். ``உலக வரைபடத்தில் உள்ள மூலை முடுக்குகளுக்கு எல்லாம் போக விரும்புகிறாயா? ஒரு நூலகத்துக்குச் செல்`` - என்கிறார் டெஸ்கார்டஸ். ``புத்தகத்தில் உலகத்தைப் படித்தால் அறிவு செழிக்கும். உலகத்தையே புத்தகமாகப் படித்தால் அனுபவம் தழைக்கும்`` - என்கிறார் கலைஞர்.

நூலகம் செல்லும் பழக்கம் என்பது அருமையானது. ஒருமுறை அதைப் பழகிவிட்டால் அது தொடர்ந்து வரும். நூலகப் பாவனை தொழிற்பாடு அலட்சியப்படுத்தப்படின் அது சமூகத்தின் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கும் அடிப்படையாக அமைந்துவிடும்.

வாசிப்புப் பழக்கத்தால் உயர்ந்தவர்கள் பலர். உயர்ந்தவர்கள் எல்லோரும் வாசிப்புப் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். ``ஒரு கோடி கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது ஒரு நூலகம் கட்டுவேன்`` - என்றார் மகாத்மாகாந்தி. ``தனித்தீவில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது புத்தகங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்துவிடுவேன்`` - என்றார் நேரு. ``என் கல்லறையில் மறக்காமல் எழுதுங்கள் இங்கே ஒரு புத்தகப்புழு உறங்குவதாக`` - என்றார் பெட்ரண்ட்ரஸல். ``மனிதனின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு எது என வினாவப்பட்டபோது சற்றும் யோசிக்காமல் புத்தகம்`` எனப் பதில் அளித்தவர் ஆல்பர்ட்ஐன்ஸ்டீன். ``வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம். சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும்`` - என்றார் மண்டேலா. ``பிறந்த நாளுக்கு என்ன வேண்டும் என்று கேட்டபோது புத்தகங்கள் வேண்டும்`` என்று சற்றும் தயக்கமின்றி கூறியவர் லெனின். ``ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கிக்கொடுக்கும் ஆகச்சிறந்த பரிசு புத்தகம்`` - என்றார். வின்ஸ்டன் சர்ச்சில். ``உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ, அதுபோல மனதுக்கு பயிற்சி புத்தகவாசிப்பு`` - என்றார் சிக்மண்ட்ஃப்ர. ``பயங்கரமான போராட்ட ஆயுதம் எது என்று கேட்டபோது புத்தகங்கள் என்று கூறியவர்`` மார்ட்டின்லூதர். ``ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள் அவன்தான் என் வழிகாட்டி`` - என்றார் ஜூலியசீசர்.



உன் வாழ்க்கையின் ஒரு பகுதியாக வாசிப்பையும் எடுத்துச்செல். அது உன்னை உயரத்துக்கு அழைத்துச் செல்லும். வாசிப்பால் உயர்ந்தவர்கள் பலர். அது ஓர் அறிவுச் சுடர். அந்த ஒளியில் நீயும் நனையத் தயங்காதே.



## பிறை எனும் நுதலவள் பெண்மை என் படும்?

### நறை கமழ் அலங்கலான் நயன கோசரம் " என்ற கம்பனின் ஜீவ வரிகளில் ..

"யானைப் பாகன் மறைந்த கணமே,. .மதம் பிடித்த யானை , தன்னை அடக்குகின்ற அங்குசத்தை தள்ளிவிட்டு தான் விரும்பிய வழியே செல்வது போலத்தான் தன் விருப்பத் தலைவன் இராமன் நடந்து கடந்து சென்ற நிலையில், சீதை மனம் தன்னை அடக்கிவைக்கும் 'நிறை' என்னும் குணத்தை நீக்கித்தான் விரும்பிய வழிச் சென்றது. என்று சீதையின் காதல் நிலையைக் கம்பன் வர்ணித்தான்.... அவனையே சாரும் 'கம்பனுக்கு நிகர் கம்பனே'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பாவனையைக் கட்டுப்படுத்த ஒன்றிணைவு அவசியம்

பழனித்துரை தர்மகுமாரன்
ஆசிரியர்
யா/உடுவில் மகளிர் கல்லூரி



போதைப்பொருள் பாவனை என்பது தமிழர் பிரதேசத்தில் அவல நிலையை உருவாக்கியுள்ளது. போதைப் பாவனையால் இளைஞர்கள், யுவதிகள் தெரிந்தோ தெரியாமலோ பாதிப்புக்கு உட்பட்டு வருகின்றனர்.

போதை என்றால் என்ன? போதைப்பொருள் எமது உடல் இயங்கு நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி சுய சிந்தனையில் இருந்து விடுபடச் செய்து எம்மை அறியாமல் செயற்பட வைக்கின்றது. மாயைத் தோற்றம் புலப்படுத்தப்படுகின்றது.

போதைப்பொருள் என்பது உலக நாடுகள் அனைத்திலும் உள்ள போதும் அது பற்றிய முழுமையான அறிவுள்ள மக்கள் கூட்டம் அதனை பாவிப்பதில்லை. ஆனால், இலங்கையைப் பொறுத்த வரையில் மதுபானம், சிகரட், புகையிலை, பனம் கள் போன்றனவே மதுபோதையாக காணப்பட்டன. அவை கூட மக்கள் உடல் நலத்துக்கு கேடு விளைவிக்கும் என்பதனால் அனேகமான புத்திஜீவிகள் தவிர்த்து வந்ததுடன் அடுத்த தலைமுறையும் பாவிக்கக்கூடாது என்பதில் கருத்தொருமித்து இருந்தனர்.

இன்று அரச அங்கீகாரம் அற்ற மாவா, சாதா, கஞ்சா, ஹெரோய்ன், கொக்கேய்ன் போன்ற போதைப் பொருள்கள் தமிழர் பிரதேசத்தில் விதைக்கப்பட்டு செறிவாக்கப்பட்டுள்ளன.

இது பாடசாலை மாணவர்களுக்கு பகிரப்படுவதால் அவர்கள் அப்பழக்கத்துக்கு உள்ளாக்கப்பட்டு பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இதன் மூலம் பாடசாலை நிர்வாகமும் பெற்றோரும் எண்ணில் அடங்காத சிரமத்தை எதிர்கொள்கின்றனர். என்ன செய்வது என்று தெரியாமல் திக்குமுக்காடுகின்றனர். பாடசாலைகளும் சமூக அமைப்புக்களும் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளனர். அப்பாவிகளான மாணவர்கள் மீது போதைப்பொருள் பாவனை திணிக்கப்படுகின்றது. அதை அவர்கள் உணர்ந்து கொள்வதற்கு முன்பாகவே போதை அவர்களை தன்வயப்படுத்திக் கொள்கின்றது.

ஆசிரியர்கள் இன்றைய நிலையை உணர்ந்து கற்றல் செயற்பாட்டுடன் போதைப்பொருள் பற்றிய முழுமையான அறிவினைப் பெற்று அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இதனால் மஞ்சள் காமாலை, தொற்றாநோய்கள், பாலியல் குறைபாடுகள், தோல் நோய்கள் ஏற்படும் எனவும் அழகிய கட்டிளமைப் பருவத்தை இழக்க வேண்டி வரும் எனவும் தெளிவுபடுத்துவதுடன் கற்றலில் பாதிப்பு ஏற்படும், சமூகத்திலிருந்து எம்மை ஒதுக்கி விடுவார்கள், அன்பான அம்மா அப்பாவை இழக்க வேண்டி ஏற்படும், நல்ல நண்பர்களை இழப்பதுடன் அன்பாக எம்மைப் பெற்றெடுத்த பெற்றோர்களையும் சமூகம் ஒதுக்கி விடும். பாடசாலையின் நன்மதிப்பு கெட்டுவிடும் என அறிவுரை கூறி பாதிப்புக்கு உள்ளாகாது பாதுகாப்பதுடன் பாதிப்புக்கு உள்ளானவர்கள் எனத் தெரிந்தால் வெறுத்து ஒதுக்காது சுட்டிக் காட்டி பேசாது, சகமாணவர்களுடன் பேசக் கூடாது என கடுமையான வார்த்தைகளையோ தண்டனைகளையோ வழங்காது அன்பாக அணுகி எங்கிருந்து இந்தப் பழக்கம் ஏற்பட்டது, எவ்வாறு ஏற்பட்டது, யாரிடம் இருந்து கிடைக்கின்றது என்பதை அறிந்து பின்னர் யாழ் மருத்துவமனையிலுள்ள அரும்புகள் என்னும் உளவள நிலையத்துக்கு அனுப்பி மாற்ற முனைய வேண்டும்.

இதற்கு பாடசாலை ஆசிரியர்கள் ஆக்கபூர்வமானவர்களாகவும் அறிவு பூர்வமானவர்களாகவும் சமூக சிந்தனை கொண்டவராகவும் செயலாற்ற முனைய வேண்டும். மாறாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் மேலும் மேலும் பாதிப்படைய கூடிய வகையில் செயலாற்றக் கூடாது. ஒவ்வொரு ஆசிரியரும் பாடசாலை மாணவர்களை தனது பிள்ளையாகக் கருதி அக்கறை கொள்வதுடன் பாடசாலையில் சிறந்த குழுவொன்றை அதிபரின் தலைமையில் உளவள ஆசிரியரையும் இணைத்து உருவாக்கி, மாணவர்களை சிறப்பான முறையில் வழிப்படுத்த வேண்டும்.

காலம் தவறிய மழையும், போகம் தவறிய பயிர்ச் செய்கையும் எவ்வாறு பிரயோசனம் அற்றதோ அதே போலவே இன்றைய போதைப் பொருள் பிரச்சினைக்கு காலம் தவறாது கல்விப்புலம் சார்ந்தவர்கள் ஆக்கபூர்வமாக செயலாற்ற வேண்டும்.

போதை எங்கிருந்து வருகின்றது எப்படி இருக்கின்றது என்பதை விட மாணவர்கள் மத்தியிலும், பாடசாலைக்குள்ளும் எவ்வாறு யாரால் கொண்டுவரப்படுகின்றது என்பதைக் கண்டு காப்பாற்ற வேண்டும். மருத்துவ சங்கத்துக்கு ஆதரவாக அரசியல்வாதிகள், ஆசிரிய சங்கங்கள், ஆன்மீகவாதிகள், பொது அமைப்புக்கள், பல்கலைக்கழக சமூகம் ஆகியோர் செயற்பட முன்வரவேண்டும்.

# வித்துவான் வேந்தனார்

வி.ரி.இளங்கோவன்.

## தமிழே உயிர் மூச்சாய்க் கொண்டு தமிழ்ப் பணியாற்றிய பெருந்தகை



தமிழ் இலக்கியப் பரப்பில் தன்னிகரற்ற பணியாற்றியவர் என்று அறியப்படும் வித்துவான் வேந்தனாரின் 104ஆவது பிறந்ததினம் எதிர்வரும் 5ஆம் திகதியாகும். அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

தமிழை உயிர் மூச்சாய்க் கொண்டு தமிழ்ப்பணியாற்றிய ஈழத்து அறிஞர்களுள் வித்துவான் வேந்தனார் குறிப்பிடத்தக்கவர். தமிழ்ப் பற்றாளராக, சிறந்த தமிழாசானாக, பிஞ்சுக் குழந்தைகள் முதல் பெரியோர்வரை பாடிக்களித்திடப் பாடல் தந்த கவிஞராக, உணர்ச்சிமிக்க பேச்சாளராக, ஆய்வுக் கட்டுரையாளராக, சைவப் புலவராக, சித்தாந்த சிரோன்மணியாக மிளிர்ந்தவர்.

சென்னைப் பல்கலைக்கழக வித்துவானான இவர் கால்நூற்றாண்டுக்கு மேலாகத் தமிழ்ப்பணியாற்றிப் புகழ் பெற்றவர். வேலணையில் 1918ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி கனகசபை - தையல்நாயகி தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் நாகேந்திரம்பிள்ளை. இளம்வயதிலேயே தனது பெயரை வேந்தனார் என மாற்றிக்கொண்டார்.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாசாபிவிருத்திச் சங்கத்தின் பிரவேச பாலபண்டிதத் தேர்வுகளிலும் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர்விலும் சித்தி பெற்றவர். சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் தேர்வில் சிறந்த சித்தி பெற்றவர். யாழ். திருநெல்வேலி பரமேஸ்வரா பண்டித ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றார்.

தமிழ்நாடு சைவசித்தாந்த சமாசத்தின் சைவப்புலவர் பட்டம் பெற்றார். திருவாவடுதுறை ஆதீனகர்த்தா இவருக்குத் 'தமிழ்ப் பேரன்பர்' பட்டம் வழங்கினார். சிறிலங்கா சைவாதீனம் 'சித்தாந்த சிரோன்மணி' பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

ஆரம்பத்தில் தாம் கல்வி பயின்ற வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை, சரஸ்வதி வித்தியாசாலை ஆகியவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றினார். பின்னர் 1946ஆம் ஆண்டு முதல் இறுதிவரை யாழ். பரமேஸ்வராக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார்.

1964 முதல் இலங்கை அரசின் பாடநூல் வெளியீட்டுச் சபையின் தமிழ்ப் பகுதி உறுப்பினராகவும் சிறிலங்கா சைவாதீனத்தின் 'நாவலன்' பத்திரிகை ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் விளங்கினார். இவரது குழந்தைப் பாடல்கள் பெரும் வரவேற்பைப் பெற்றவை. இன்றுவரை தமிழ்ப் பாடசாலைகளில் இவரது குழந்தைப் பாடல்கள் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

'கவிஞன்' என்ற தலைப்பிலான இவரது கவிதை பலரது கவனத்தை ஈர்த்தது.

**'பாடுகின்றோர் எல்லோருங் கவிஞரல்லர்**
**பாட்டென்றாற் பண்டிதர்க்கே உரிமையல்ல... ..'**


எனத் தொடங்கும் அக்கவிதை..!

இவரது குழந்தைக் கவிதைத் தொகுப்பாக முதலில் 'கவிதைப் பூம்பொழில்' வெளியானது.

பண்டிதமணி இந்நூலுக்குச் 'சிறப்புப் பாயிரம்' வழங்கியுள்ளார். இந்தச் சிறப்புப் பாயிரத்தின் இறுதியில் இவரை நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் வாரிசாக குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நூலுக்குப் பண்டிதர் நவாலியூர் சோ. இளமுருகனாரும் 'சிறப்புப் பாயிரம்' அளித்துள்ளார். எழுச்சிக் கவிஞராக, புதிய தலைமுறைக் கவிஞர்களுக்கு வழிகாட்டியாக, குழந்தைக் கவிதைகளின் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

தமிழர் இந்த நாட்டில் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்ற தணியாத தாகம் கொண்டவராக விளங்கிய இவர் எழுத்திலும் பேச்சிலும் அதனை வலியுறுத்தி வந்தார். நாட்டிற்காய் இளைஞர் கூட்டம் கிளர்ந்தெழுதல் வேண்டுமென அவரது 'அவளும் அவனும்' என்ற காவியத்தில் வரும் கருத்துக்கள் தீர்க்க தரிசனமானவையெனக் கூறுகின்றனர். விடுதலைப் போராட்டத்துக்கு 'அகிம்சை வழி' உகந்ததல்ல' என்ற கருத்தும் அவர் கவிதைகளில் தெறித்துள்ளன. **'அறப்போருக்கு அறைகூவல்'** என்ற தலைப்பில் தொடர்ச்சியாக எழுச்சிப் பாடல்கள் பலவற்றை எழுதியுள்ளார். இவர் 1966ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் திகதி தனது 48 வயதில் இயற்கை எய்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறையில் இருந்து வந்து சாகித்ய விருது பெற்ற சிவ ஆரூரன்

கடந்த 28ஆம் திகதி இடம்பெற்ற சாகித்ய விருதுகள் விழா - 2022 இல், சிறந்த நாவலுக்கான சாகித்ய விருதை எழுத்தாளர் சிவ ஆரூரன் அவர்கள் சிறையில் இருந்து காவல்துறை பாதுகாப்புடன் வருகைதந்து விருதைப் பெற்றுக்கொண்டார்.

விமர்சகர்கள் கண்களில் படாத முதன்மை நிலைப் படைப்பாளி சிவ. ஆரூரன்.

**யார் இந்த சிவ.ஆரூரன் ?**

சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் வாழ்ந்து கொண்டு தமிழ் மீதான அளவற்ற பிடிப்புக் காரணமாக கிடைக்கும் நேரத்தைப் பொன்னாக்கிக் கொண்டிருக்கும் அற்புதப் பிறவிதான் ஆரூரன். கல்வியால் பொறியியலாளர். இனப்பற்றுக் கொண்டவர். 42 வயது இளைஞர்.

1. யாழிசை - நாவல் - சாகித்ய விருது - முதலிடம்
2. யாவரும் கேளிர் நாவல் - சாகித்ய விருது - சான்றிதழ்
3. வலசைப்பறவைகள் - நாவல் - சாகித்ய விருது - சான்றிதழ் (ஜீவநதி வெளியீடு)
4. The innocent victims - நாவல் (ஜீவநதி வெளியீடு)
5. ஊமை மோகம் - நாவல் - வடமாகாண சிறந்த நாவல் - முதலிடம் (ஜீவநதி வெளியீடு)
6. பூமாஞ்சோலை - சிறுகதை (ஜீவநதி வெளியீடு)
7. ஆதுரசாலை - நாவல் - சாகித்ய விருது - முதலிடம் - வடமாகாண சிறந்த நாவல் - முதலிடம் (ஜீவநதி வெளியீடு)

உதயணன் விருது இருதடவை.

எழுதும் அனைத்துக்கும் விருது பெறும் படைப்பாளி.

இவ்வாறான பல படைப்பாளிகள் விமர்சகர்கள் கண்களுக்குத் தெரியாமல் போவது அவர்கள் விமர்சனம் தொடர்பான சந்தேகத்தைத் தோற்றுவிக்கிறது. எமக்குப் பிடித்தவர்களைக் கொண்டாடும் விமர்சனங்களே இன்று வெளியாகி வருகின்றன... அமைதியான முறையில் இலக்கியம் படைத்து வரும் ஆரூரன் போன்ற இலக்கியவாதிகள் கண்டும் காணாமல் விடப்படுகிறார்கள். ஆனால், ஆரூரன் போன்ற செயற்பாட்டு வீரர்களுக்கு இது பற்றி எந்தக் கவலையும் இல்லை. அவர்கள் தம்மால் முடிந்த தமிழ் இலக்கியப் பணியை ஆற்றுகிறார்கள். ஆனால், நடுநிலை விமர்சகர்கள் ஒரே படைப்பாளர்களை மாத்திரம் பிரஸ்தாபிக்காமல் இவர்களையும் படிக்கவேண்டும்.

**ஆரூரனின் வெளிவர உள்ள நூல்கள்**

சிறுகதைத் தொகுப்பு
ஹைக்கூ தொகுப்பு
மகாபாரதம் (நினைக்க முடியாத பிரமாண்ட படைப்பு)

## புதன்பொய்கைக்கு எழுதுங்கள்

புதன்பொய்கையில் உங்கள் ஆக்கங்கள் (இலக்கியம், கலை மற்றும் கலாசாரம்), இலக்கியப் படைப்புக்கள் விமர்சனங்கள், கவிதைகளை பிரசுரிக்க ஒரு வாய்ப்பு.

உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் கலை, கலாசார நிகழ்வுகள், நூல்வெளியீடுகள், ஆற்றுகைகள் தொடர்பான பதிவுகளையும் புகைப்படங்களுடன் அனுப்புங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**
புதன்பொய்கை, உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் முகவரி :
**puthanpoigai@gmail.com**

# கவி பாடும் கம்பன் நான்

கவி பாடும் கம்பன் நான்
கவி பாடும் கம்பன் நான்
கலைக்கோவில் கண்டேனே...
அசைந்தாடும் சிற்றிடையில்
மதி மயங்கி நின்றேனே...

பொன்சிலையா பெண்சிலையா என
குழம்பச் செய்யும் உன் பேரழகில்
கவி வடிக்கத் துடித்தேன்
கயல் விழி உன்னில் லயித்தேன்...

மாதத்தில் மார்கழியாய்
பனிவிழும் பின்னிரவில்
பூத்துக்குலுங்கும் என் பேரழகே
குளிர்காய நான் வரலாமோ...

துயில் கொள்ள மடி தந்தால்
தாய்மை காதல் நான் தருவேன்
தாய்மை போன்று என் நெஞ்சில்
உன்னை
தாங்கி நானும் வாழ்ந்திடுவேன்!





தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ஏ.எம். றியாஷ் அகமட் எழுதிய "கடல் அட்டை வளர்ப்பும் யாழ். தீவக கடல்களின் அரசியலும் சூழலியலும்" என்ற நூல் வெளியீட்டு விழா யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.அன்னராசா தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.


தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ஏ.எம். றியாஷ் அகமட் நூலை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் சூழலியலாளர் பொ.ஐங்கரநேசன் பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் பொ.ஐங்கரநேசன், சமூக செயற்பாட்டாளர் ம.செல்வின், கடற்றொழில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிவில் சமூக பிரதிநிதிகள் ஆர்வலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ய-20)

## நீத்தார் நயப்புரை

# சேவையுள்ளத்துக்கு இலக்கணமே அழகம்மா என்ற அழகரத்தினம்

செல்வராஜா ரமேஷ்
தலைவர்
ஹேமலதா ஞாபகார்த்த
ச.ச.நிலையம்
நவாலி



வலி.தென். மேற்கு பிரதேசத்திற்குட்பட்ட நவாலியில் பிறந்து, வாழ்ந்து பல்வேறு சமய சமூக மற்றும் தொண்டுப் பணிகளில் ஈடுபட்டு கடந்த மாதம் 3ஆம் திகதி தனது 97ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தவர் அழகம்மா எனப்படும் திருமதி கந்தையா அழகரத்தினம்.

2007ஆம் ஆண்டு இந்தியாவின் பல்வேறு இந்து ஆலயங்களை நேரில் சென்று தரிசித்த பின்னர், ஆந்திராவில் சத்திய சாய்பாபாவின் நேரடி தரிசனம் கிடைக்கப்பெற்றவர் திருமதி அழகரத்தினம் ஆவார்.

இதனைத் தொடர்ந்து நவாலி ஹேமலதா ஞாபகார்த்த நிதியத்தின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவராக இருந்து மக்கள் சேவைப் பணியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு தன்னாலான சேவைகளைச் செய்தவர் அழகரத்தினம்.

நவாலியில் கடந்த காலத்தில் 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என ஏழை எளியோருக்கு மிகச் சிறந்த சேவை செய்த சின்னத்தம்பி செல்லத்துரை - தங்கமுத்து தம்பதியினருக்கு மகளாகப் பிறந்த அழகரத்தினம் என்ற அழகம்மா தாய் தந்தையரைப் போன்று பல குடும்பங்களை வாழவைத்து இறைவனடி சேர்ந்தாலும் அவரது வாழ்வும் வளமும் இறப்புக்குப் பின்னரும் வாழ்ந்துகொண்டு இருக்கும் என்றால் அது மிகையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 26 . 09 . 1940



விண்ணில் 04 . 10 . 2022

கடந்த 04.10.2022 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவர்

அமரர்

## கந்தையா கதிர்காமத்தம்பி

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (03.11.2022) வியாழக்கிழமை பகல் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


மேலும், எங்கள் குடும்பத்தலைவரின் மரணச்செய்தி கேட்டு எங்களுக்கு ஆறுதல் கூறியதோடு, பல்வேறு வழிகளில் உதவிபுரிந்த உற்றார், உறவினர், அயலவர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 05 . 1969



இறப்பு 01 . 11 . 2022

## திரு.செல்வராஜா றமேஸ்

(உள்ளூராட்சி உதவியாளர்,காரைநகர் பிரதேசசபை,
இணைப்பு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,மானிப்பாய் )

ஹேமா இல்லம், நவாலி வடக்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.செல்வராஜா றமேஸ் நேற்று (01.11.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராஜா-செல்வராணி தம்பதியரின் புதல்வரும் சுதா (ஆசிரியை - யாழ்.மானிப்பாய் சென்ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், அஸ்வினி, ஓசாயினி (மாணவிகள் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ரிஷாந் (மாணவன் - யாழ்.மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுரேஷ் (ஆசிரியர் - யாழ்.மத்திய கல்லூரி), காலஞ்சென்றவர்களான ஹேமலதா, சதீஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2022) வியாழக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

**0775226462**

# மரண அறிவித்தல்


## நாகலிங்கம் குமாரகுருநாதன்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கந்தரோடை தம்பளை சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் குமாரகுருநாதன் நேற்று (01.11.2022) செவ்வாய்க்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் இலக்குமி தம்பதியரின் பாசமிகு ஏகபுத்திரனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் குட்டிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் தனலட்சுமி, சின்னக்கிளி, காலஞ்சென்ற இராசதுரை, புஸ்பராணி (கேப்பாய்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற பரந்தாமன் மற்றும் ஜெயந்தி, கிருபானந்தன் (நோர்வே), வசந்தி (கனடா), பாலகுமார் (டென்மார்க்), உதயகுமார் (டென்மார்க்), சாந்தகுமார் (தொழில்நுட்பக் கல்லூரி கொக்குவில்), பாஸ்கரன் (சுவிஸ்), பரமசிவன் (கனடா), ஜெகதீஸ்வரி (கிருஜா - நோர்வே), பரமேஸ்வரி (வனஜா - கனடா), காலஞ்சென்ற சிறியபரந்தாமன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசமலர், றோசா (நோர்வே), விநாயகமூர்த்தி (கனடா), சுகிந்தா (டென்மார்க்), விஜிதா (டென்மார்க்), பாமினி (BOC, 2ஆம் கிளை, யாழ்ப்பாணம்), அனோஜா (சுவிஸ்), கீதா (கனடா), செல்வஆஜா (நோர்வே), காந்தசீலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் தீபன், செல்வி, சாரங்கன் (கனடா), சிவரூபன், சகானா, கஜரூபன் (நோர்வே), திசானா, சவிதா, ஹருணி (டென்மார்க்), நிரோசன், கிஷோர், சயந்தவி (டென்மார்க்), பிரசாந், அக்ஷயா, லக்ஷயா (கொக்குவில்), ஆகீசன், சொப்னா, அஜித் (சுவிஸ்), தரங்கினி, பிரணவன் (கனடா), கௌதமன், தர்சிகா, விஜய் (நோர்வே), அபிசா, சாருஜன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் செரீனா, லியோன், ஜெய்டன், ஹெரா, ஆதவன், சினேகா, சுகர்னா, லக்ஷனா, ஆதவன், இஷானி, ஆதிரா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2022) புதன்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் கவலையுடன் தெரிவிக்கின்றோம்.

தகவல்:
குட்டிப்பிள்ளை - 0212240388
த.சாந்தகுமார் - 0772437228



பிறப்பு 07.10.1926

இறப்பு 01.11.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## தம்பிப்பிள்ளை கந்தசாமி

### (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)



கவுணாவத்தை வைரவர் கோவிலடி, கருகம்பனையைப் பிறப்பிடமாகவும், ஏழாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை கந்தசாமி நேற்று (01.11.2022) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், திலகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற குகன் (ஜேர்மனி) மற்றும் மாலதி (ஓய்வுபெற்ற உப தபாலதிபர் - ஏழாலை), சபேசன் (கனடா), உஷாசுதாநிதி (ஜேர்மனி), காலஞ்சென்ற உதயபானு (சேகர் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அகல்யா, கிருஸ்ணதாசன் (வாணி ரெக்ஸ்), மகாதேவன், நந்தினி, சுதர்சினி ஆகி யோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, கதிராசிப்பிள்ளை, கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, தங்கத்துரை, இராஜதுரை மற்றும் மார்க்கண்டு (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வினோத், அஜித்தா - சதீஸ், சவிதா, ஆரூரன், மயூரன், ஆதிரை, அனுஷன், ஆரணி, சருண்ஜா, ஜோசிகா, லேனுகா ஆகியோரின் அன்புப் பேரனும், கியாரனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2022) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காடாகரம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொளவும் .

**ஏழாலை கிழக்கு, ஏழாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**021 205 9406**

**தொடர்புகளுக்கு:**

| | | |
|---|---|---|
| மாலதி | (மகள் | - 077 910 3496) |
| கிருஸ்ணதாசன் | (மருமகன் | - 077 466 1237) |
| சபேசன் | (மகன் | - 647 500 5270) |
| மகாதேவன் | (மருமகன் | - +4917 6204 65047) |
| அகல்யா | (மருமகள் | - 0049 2016 03209) |
| உஷாசுதாநிதி | (மகள் - | 004917624968420) |
| நந்தினி | (மருமகள் | - 905 472 6504) |
| சுதர்சினி | (மருமகள் | - 0044 7716 114 933) |

தோற்றம்
27.12.1927

மறைவு
01.11.2022

# மரண அறிவித்தல்

## திருமதி முத்துத்தம்பி தெய்வானைப்பிள்ளை



மட்டுவில் மத்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துத்தம்பி தெய்வானைப்பிள்ளை கடந்த (31.10.2022) திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு முத்துத்தம்பி (இளைப்பாறிய - ஆசிரியர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு நாகம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு பறுவதம் தம்பதியரின் அன்பு மருமகளும், சிவசுப்பிரமணியம் (இலங்கை) இராஜகோபால் (கனடா), காலஞ்சென்ற விக்கினேஸ்வரன், சாரதாதேவி (இலங்கை), இந்திரபவன் (கனடா), இரவீந்திரகுமார் (லண்டன்), சரோஜினிதேவி (கனடா), கோமதி (கனடா), காலஞ்சென்ற இரஞ்சினிதேவி ஆகியோரின் தாயாரும், கமலநாயகி (இலங்கை), இரகுமணி (கனடா), கணேசமுர்த்தி (இலங்கை), வரதலெட்சுமி (கனடா), ஜெகதீஸ்வரி (லண்டன்), விமலச்சந்திரன் (கனடா), குமரகுருபரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியரும், காலஞ்சென்ற தம்பையா, காலஞ்சென்ற மயில்வாகனம், கமலேஸ்வரன், பறுவதம், காலஞ்சென்ற வியாழாச்சி, காலஞ்சென்ற கமலேஸ்வரி, இராஜேந்திரம் (கடவுள்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற செல்லையா, கதிரவேலு (இராசா), காலஞ்சென்ற காமாட்சி, காலஞ்சென்ற சிவக்கொழுந்து, காலஞ்சென்ற பரிமளம், காலஞ்சென்ற பகவதி, காலஞ்சென்ற சாந்தநாயகி ஆகியோரின் மைத்துனியும், சதீஸ்குமார் (லண்டன்), சுரேஷ்குமார் (லண்டன்), மிதிலா (அமெரிக்கா), கிருஷ்ணவேணி (இந்தியா), சந்திரிகா (கனடா), திவிஷா (அமெரிக்கா), அருள்சாந்தன் (பிரான்ஸ்), செந்தில்மதி (பிரான்ஸ்), சஞ்ஜீவன் (கனடா), சயரூபன் (இலங்கை), சிபானி (கனடா), சியந்தன் (கனடா), சயந்தன் (கனடா), சுபிதா (கனடா), சுதர்சன் (கனடா), கிருத்திகன் (லண்டன்), காலஞ்சென்ற சஞ்ஜீத்தா, ஸ்ரீவன் (கனடா), சிமியோன் (கனடா), சிம்சோன் (கனடா), சுசன்னா (கனடா), றிசானி (கனடா) ஆகியோரின் பேர்த்தியும், டெவினா, டெனுசன், அருண்கரித், சஞ்சித், சொஃபியா ஆரிவ், ஆய்ரா, சஸ்மித், சமீரன், அஸ்வின், அபிசா, அஜய், அய்ஷா, அஜய், அஷ்மிதா, அஷ்விகா, அக்ஷா, சஜீவ், அகானா, அஸ்வின், அனுஷன், சமிஞ்ஞா, சஜீத், ஜெய்சன், ஜானவி, சயுசன், அபிஷ்னா, ஆரோன், ஆபேல், அவினி, நோவா, லூக்கா, அத்தீனா, அத்விக், ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை மட்டுவில் மத்தி நெரியதூ மயானத்தில் நாளை (03.11.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு:**
**021 205 7573**
**076 921 0636**
**076 999 5465**
**077 618 9054**


**தகவல்: குடும்பத்தினர்**
**M.M. சிவசுப்பிரமணியம்**
**(மகன்)**

தோற்றம்
16.10.1930

மறைவு
31.10.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மலர்வு 20 . 09 . 1930

உதிர்வு 30 . 10 . 2022

## முத்தையா சபாரத்தினம் (சபா)

தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கு வட்டுவினியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா சபாரத்தினம் (சபா) அவர்கள் கடந்த (30.10.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், கனகாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பிமுத்து இராசம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற முத்தையா பூரணம் அவர்களின் அன்புச் சகோதரனும், சுரேஸ்குமார் (டென்மார்க்), கிருஸ்ணகுமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தாதேவி, ரஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிந்தன், பாவனா, பூபதாஸ், கிரிதாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2022) வியாழக்கிழமை இணுவில் மேற்கு, வட்டுவினியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இணுவில் மேற்கு, வட்டுவினி.**
**076 893 9946**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 21474) 1/6

# மரண அறிவித்தல்



பிறப்பு 30 . 11 . 1932

இறப்பு 01 . 11 . 2022

## தங்கரட்னம் கந்தசாமி (பரமேஸ்வரி)

யாழ்ப்பாணம், கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தங்கரட்னம் கந்தசாமி அவர்கள் நேற்று (01.11.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னையா-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் கந்தசாமியின் (சமாதான நீதவான்) பாசமிகு மனைவியும் சுசீந்திரன் (ஓய்வுபெற்ற பிராந்திய முகாமையாளர் - மக்கள் வங்கி), சுகந்தி, சுமந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயந்தி, யோகேந்திரன், கௌசல்யாதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பவித்திரா( லிவர்பூல்), பிரீத்திகா (ஆசிரியை - யா/கைதடி முத்துக்குமாரசாமி ம.வி), பிருந்தா (வைத்தியர் - யாழ். போதனா வைத்தியசாலை), திவ்யா, நிரூஜா (லண்டன்), ஹரிகிஷன் (லண்டன்), ஜெய்கிஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆதிரன், ஆதித்தன், அகரன், ஓவியா, இனியா ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சின்னம்மா, சந்திரசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2022) வியாழக்கிழமை பி.ப.2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

**இல 27,கச்சேரியொழுங்கை,**
**யாழ்ப்பாணம்**

**தகவல் : குடும்பத்தினர்.**
**0212212603**

# மரண அறிவித்தல்

## கதிர்காமநாதன் வசந்தராணி (வசந்தா)



ஊரெழுமேற்கு இந்திராணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிர்காமநாதன் வசந்தராணி கடந்த (29.10.2022) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வசந்தராசா மற்றும் மனோன்மணி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்புப் பெறாமகளும் காலஞ்சென்ற வர்களான வல்லிபுரம் சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகளும் கதிர்காமநாதனின் அன்பு மனைவியும் ரேவதி, பிரதீபன், பிரஷாத், அதிகஜன், ஆகியோரின் அன்புத் தாயாரும் வதனி, வரதன், வசந்தன், வனிதா, காலஞ்சென்ற வசந்தி ஆகியோரின் மூத்த சகோதரியும் ரவிச்சந்திரன், கனஸ்வினி, சுகன்யா ஆகியோரின் மாமியாரும் சாங்கவி, சகானன், அம்சஜன், அக்ஷயா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**“சகானன் இல்லம்”,**
**ஊரெழு மேற்கு,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு வாரங்களுக்குள் நிரந்தர 'லைசென்ஸ்'

கொழும்பு; நவ. 2

தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டவர்களுக்கு எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் நிரந்தர சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப் படும் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள் ளது.

சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடப்படும் அட்டையின் தட்டுப்பாடு காரணமாக சுமார் 6 லட்சம் சாரதி அனுமதிப்பத்திரங்கள் தற்காலிகமாக வழங்கப்பட்டன என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் சாரதி அனுமதிப்பத்திர அட்டைகளை ஒஸ்ரியாவில் இருந்து இறக்குமதி செய்ய தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, எதிர் வரும் இரண்டு வாரங்களுக்குள் உரிய அட்டைகள் இலங்கையில் பெற்றுக் கொள்ளப்படும் என மோட்டார் போக்கு வரத்து ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

(எ-14)

## பெயர் மாற்றம்

தேவாலய வீதி, சங்கானையில் வசிக்கும் **விஜயலெச்சுமி** ஆகிய நான் எனது பெயரை **விஜயலட்சுமி** என மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் **விஜயலட்சுமி** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கு அமைவாக மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(CS 47388) (3/6) **விஜயலட்சுமி**

## பெயர் மாற்றம்

அம்பாள் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலில் வசிக்கும் **அமிர்தலிங்கம்** ஆகிய நான் எனது பெயரை **அமுதலிங்கம்** என மாற்றம் செய்வதோடு. இனிவரும் சகல ஆவணங்களிலும் **அமுதலிங்கம்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கு அமைவாக மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs 47402) (2.6) **அமுதலிங்கம்**

## மரண அறிவித்தல்



### திருமதி திருமகள் கனகரட்ணம்

**(Retired Diet Clerk - Teaching Hospital, Jaffna.)**

வட்டு தென்மேற்கு வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருமகள் கனகரட்ணம் கடந்த (30.10.2022) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராசையா (Malayan Pensioner) செல்வரத்தினம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற கனகரட்ணத்தின் அன்பு மனைவியும், சுப்ரமணியம் (Netherland), ஜனனி பகீரதன் (ஆசிரியர் - யா/வட்டு மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சரோஜினி (Netherland), காலஞ்சென்ற பகீரதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், திவாகர் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்- சண்டிலிப்பாய் செயலகம்), கவாஸ்கர் (பயிலுனர்- நில அளவைத் திணைக்களம்), சாரங்கி (விஞ்ஞான பீடம் யாழ். பல்கலைக்கழகம்), திருமதி திவாகர் தாரகா (ஆசிரியர் - மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், அஷ்மிதனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (31.10.2022) அன்று நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**திக்கராய் வீதி, வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**T.P:077 1040 870**

(CR 7041)1-6

## மரண அறிவித்தல்

**பிறப்பு 20 . 08 . 1953**



**இறப்பு 31 . 10 . 2022**

### கிருஸ்ணமூர்த்தி விஜயலட்சுமி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சித்திரமேழியை வதிவிடமாகவும் கொண்ட கிருஸ்ணமூர்த்தி விஜயடசுமி அவர்கள் கடந்த 31.10.2022 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் செல்லமுத்து தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்ற நமசிவாயம் தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், கிருஷ்ணமூர்த்தியின் (பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுசங்க முன்னாள் கிளை முகாமையாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற கதிர்காமநாதன், தெய்வநாயகி, வேலுநாதன், சண்முகநாதன், சிவகுருநாதன், தனலட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரியும், சபித்தாதேவி, ராமதாஸ், சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கல்பனா, தமிழினி, தர்மினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கேதீஸ்வரன், வசீகரன், கார்த்திகேயன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கேஷான், கேஷானிகா, லக்ஸன், வக்சன், மகிசாயினி ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2022) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பாதர்காடு இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**0212211927**

**தகவல் : குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



### திரு. சண்முகரத்தினம் பாலேந்திரா

**(முன்னாள் எலக்ரிக்கல் போர்மன் – கொழும்பு, சவுதிஅரேபியா, ஓமான்)**

**மலர்வு 14.08.1957** **உதிர்வு 31.10.2022**

காரைநகர் கணக்கனார்கண்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகரத்தினம் பாலேந்திரா அவர்கள் கடந்த (31.10.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகரத்தினம் - தேவிகாராணி தம்பதியினரின் அன்பு மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற பாக்கியலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், குபேரன் (திட்டமிடல் செயலகம் - வடக்கு மாகாணம்), குபேரதி ஆகியோரின் அன்புத் தந்தையும், மயூரன் அவர்களின் பாசமிகு மாமனாரும், சயன், பத்மஜா, சரண் ஆகியோரின் ஆசைப் பேரனும், பாலராணி, காலஞ்சென்றவர்களான பாலசந்திரன், பாலேஸ்வரன் மற்றும் பாலரஞ்சினி (UK), காலஞ்சென்ற சூரியகுமார் ஆகியோரின் அன்பு மூத்த சகோதரனும், கணேசபிள்ளை, சண்முகசுந்தரம்பிள்ளை, தனலட்சுமி, ஜெயராஜசிங்கம், சிறிவள்ளிநாயகம் (France), நாகரத்தினம், காலஞ்சென்ற ஜெகதீசன் மற்றும் விக்கினேஸ்வரன் (UK) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2022) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கணக்கனார்கண்டி, காரைநகர்.**

**தகவல் குடும்பத்தினர்**

**077 779 4412 021 221 1763**

**குபேரன் (மகன்), குபேரதி (மகள்)**

(CS 47403) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பில்...

பிற்பகல் 2.30 மணியளவில் மருதானையில் இருந்து ஆரம்பமாகும் பேரணி, கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை வந்தடைந்த பின்னர், அங்கு கூட்டமொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

'அரச அடக்குமுறைக்கு எதிரான மக்கள் சக்தி' எனும் தொனிப்பொருளின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள குறித்த எதிர்ப்பு நடவடிக்கைக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, சுதந்திரக்கட்சி, முன்னிலை சோஷலிஸக் கட்சி, சுதந்திர மக்கள் சபை, 43ஆம் படையணி உட்பட 20க்கும் மேற்பட்ட கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

100க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களும், வெகுஜன அமைப்புக்களும் பேரணியிலும், கூட்டத்திலும் இணையவுள்ளன. அனைத்துப் பல்கலைக்கழக மாணவ சங்கங்களும் ஆதரவு தெரிவித்துள்ளன. எனினும், குறித்த போராட்டத்துக்கு ஆதரவு வழங்க ஜே.வி.பி. மறுப்பு தெரிவித்துள்ளது. (அ-ம-44-22)

## இம்மாத...

அபுதாபியில் தொழில்துறை மாநாடொன்றில் கலந்துகொண்டுள்ள அவர், அங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடும் நிதி நெருக்கடியில் இருக்கின்ற இலங்கைக்கு சீனாவிடம் இருந்து டீசல் பெறுவதற்கான பேச்சில் கொள்கையளவில் சில உடன்பாடுகள் ஏற்பட்டுள்ளன. அநேகமாக நவம்பர் மாத இறுதியில் குறித்த டீசல் கப்பல் இலங்கையை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது - என்றார். (அ-ம)

## யாழ்...

பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட காக்கைதீவுப் பகுதியில் 11 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு மழைக்காலத்தின் போதும், தொடர்ச்சியாக நாம் இவ்வாறு இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றோம். மழைக்காலத்தின்போது மீனவ சங்கத்தின் கட்டடமே எமக்கு கதியாக உள்ளது. வடிகால்களும் சீரற்ற நிலையில் உள்ளதால் கடல் நீரும் உட்புகும் ஆபத்து எமது பகுதியில் உள்ளது. ஆனால், அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் பாணும் பருப்பையுமே எமக்கு தந்து செல்கின்றனரே தவிர ஒரு நிரந்தரத் தீர்வை வழங்குவதற்கு எவரும் முன்வரவில்லை. எனவே துறைசார் அதிகாரிகள் இது தொடர்பில் கூடுதல் கவனமெடுத்து இந்த அவல வாழ்வில் இருந்து எம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (அ-ம-125-27-26)

## சமூகப்பணியாளரும்...

களின் செயற்பாட்டாளராகவும், ஊடகவியலாளராகவும், உள்ளூராட்சி மன்ற உதவியாளராகவும் பன்மைத்துவ ஆளுமை கொண்டவராக விளங்கிய செல்வராஜா ரமேஸ், பல்வேறுபட்ட காத்திரமான சமூக சேவைகளையும் ஆற்றி வந்தார். இந்த நிலையில் நேற்று மாலை அவர் மாரடைப்புக் காரணமாக உயிரிழந்தார். (அ-ம)

## கத்தியைக்காட்டி...

மூன்று பெண்கள் வீதியால் நடந்து சென்றபோது, அவர்களிடத்தில் விலாசம் விசாரிப்பதுபோன்று வந்த இரண்டு நபர்கள் சிறிது நேரத்தில் கத்தியைக் காட்டி ஒருவருடைய ஒரு பவுண் தங்கச் சங்கிலி மற்றையவர்களுடைய கவரிங் சங்கிலி என்பவற்றைக் கொள்ளையிட்டுள்ளனர். அத்துடன், பிறிதொரு பெண்ணின் தோடும் கொள்ளையர்களால் பிடுங்கி எடுக்கப்பட்டுள்ளது. காது கிழிந்த நிலையில் அந்தப் பெண் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளார். (அ-ம-23)

## சிப்பாயொருவர்...

சடலம் தெல்லிப்பழை போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி அ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## வடக்கில்...

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இலங்கையை அண்மித்துள்ள வளிமண்டலத் தாழ்வு நிலை காரணமாக, மழையுடனான வானிலை மேலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பிற்பகல் அல்லது இரவு வேளையில் தீவின் பெரும்பாலான பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். அத்துடன், வடக்கு, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையில் மழை பெய்யும்.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், ஊவா மற்றும் வடக்கு மாகாணங்களில் சில இடங்களில்150 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழையும் ஏனைய இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழையும் எதிர்பார்க்கலாம்.

இடியுடன் கூடிய மழையின்போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (அ-ம)

(தொடர்புடைய செய்தி - பக்.4)

## மாவீரர்...

கடமையில் ஈடுபட்ட இராணுவத்தினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், அவர்களை ஒளிப்படமெடுத்து அச்சுறுத்தியுமுள்ளனர்.

மாவீரர் வாரத்தை முன்னிட்டு கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டனர். இதன்போதே அங்கு பாதுகாப்புக் கடையில் ஈடுபட்ட இராணுவத்தினர் குறித்த வீதியைத் துப்புரவு செய்து அங்கு பௌத்தக் கொடிகளை நடுவதற்கு முற்பட்டதுடன் முன்னணியினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதையடுத்து மேலதிகமாக இராணுவத்தினர் குவிக்கப்பட்டு அந்தப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. துயிலுமில்லத்தைத் துப்புரவு செய்த முன்னணியின் செயற்பாட்டாளர்களை இராணுவத்தினர் ஒளிப்படமும் எடுத்தனர்.

சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்த நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "மாவீரர் நாள் நினைவேந்தலை குழப்புவதற்காக பௌத்த நிகழ்வுகள் இல்லாத நாளில் இவ்வாறு பௌத்த கொடிகளை நட்டு எமது நினைவேந்தலைக்கூட செய்வதற்கு இடையூறு விளைவிக்கிறது இந்த இராணுவம்.

நினைவேந்தலை அமைதியான முறையில் செய்வதற்கு அரசு அனுமதித்த போதிலும் இராணுவத்தினரின் இவ்வாறான செயல் வருந்தத்தக்கது. நீங்கள் இறந்த ஆன்மாக்களின் நினைவேந்தலை தடைசெய்ய முற்பட்டு மீண்டும் பாவமூடைகளை சுமக்காதீர்கள். இன்று நாட்டின் நிலைமைக்கு இதுவும் ஒரு காரணம். எம்மை சுடுவதென்றால் சுடுங்கள். நாம் எமக்காக மரணித்த வீர மறவர்களின் நினைவேந்தலை முன்னெடுப்போம் - என்று தெரிவித்தார். (அ-ம-26-20-27)

## ஆளில்லாத...

காட்டுப் பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது. வீட்டின் புகை போக்கி வழியாக உள்நுழைந்த திருடர்கள் மேற்படி நகைகளை திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-159)

## விபத்தில்...

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த எஸ். விக்கினேஸ்வரன் (வயது- 68) என்பவரே உயிரிழந்தவராவார்.

நடந்து சென்ற முதியவரை மோட்டார் சைக்கிளில் வந்த பெண்ணொருவர் மோதியுள்ளார். இதையடுத்துக் காயமடைந்த முதியவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டபோதிலும் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

## தவறான...

முடிவெடுத்து உயிரிழந்தார். சசிகுமார் லக்சன் (வயது-25) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

தனது காதலியுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளை அடுத்து அவர் 'வீடியோ' அழைப்பை மேற்கொண்டவாறு தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பரிபாலனசபையின் நீண்டகாலம் உறுப்பினராக இருந்து கடந்த 30.10.2022 அன்று அமரத்துவம் அடைந்த

**இலங்கையர் விசுவலிங்கம்**

அவர்களின் மறைவு எமக்கு பேரிழப்பாகவே உள்ளது. அன்னாரின் துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கைதடி வீரகத்தி விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

நம்பிக்கை பொறுப்பாளர்
பரிபாலனசபையினர்
கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில், முதலாய கோயில்கள்

## மரண அறிவித்தல்

பிறப்பு 19.10.1942



இறப்பு 01.11.2022

### விவேகானந்தன் கனகாம்பிகை

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி கோணாந்தோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விவேகானந்தன் கனகாம்பிகை நேற்று (01.11.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் கனகசபை பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் விவேகானந்தன் அவர்களின் அன்பு மனைவியும் ரமேஷ், மகேசன், சுபாசினி ஆகியோரின் அருமைத்தாயாரும் ஜெயந்தினி, ஜெய்க்குமார் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான தங்கராசா, செல்வராசா மற்றும் அன்னலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தட்ஷாயினி, தாரணி, அஸ்வினியா, ஜெனார்த்தனன், ஜெனித்தன், ஜெனிற்றா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தஷ்வின், சதுஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2022) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2.00 மணிளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41/6, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
மகன் (ரமேஷ்)
0774656492

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'டைட்டானிக்' கப்பல்போல் இலங்கை மூழ்கும் நிலை

## ஆயினும் மீட்டெடுப்பேன் என ஜனாதிபதி ரணில் உறுதியுரை

கொழும்பு, நவ. 2

பொருளாதாரத்தில் மிகவும் வீழ்ச்சியடைந்த இலங்கையை முதலாவதாக வங்குரோத்து அடைந்துள்ள நிலையிலிருந்து மீட்டெடுப்போம். பனிப்பாறையில் மோதிய 'டைட்டானிக்' கப்பல் போன்ற இலங்கையை காப்பாற்ற என்னால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் முன்னெடுத்து வருகிறேன். தேயிலை உற்பத்தித்துறை, விவசாயம், சுற்றுலா உள்ளிட்ட சகல துறைகளையும் முன்னேற்ற வழி வகுப்பேன்.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார். பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கை தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் 32ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், நாம் வங்குரோத்தடைந்துள்ளோம் எனும் நிலையை மாற்றுவதற்கு அவசியமான நகர்வுகளை முன்னெடுத்துள்ளோம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

**தேயிலை உற்பத்தித்துறையை நவீனமயப்படுத்தல்**

போட்டிமிகு சந்தையில் நிலைத்திருக்கவேண்டுமாயின் தேயிலைத் தொழிற்றுறையை நவீனமயப்படுத்தவேண்டும். ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட பொருளாதாரத்தில் இது மிகவும் இன்றியமையாதது. ஆரம்பத்தில் தேயிலைத் தொழிற்றுறையில் கிடைத்த வெற்றியை மீண்டும் உறுதிசெய்யவேண்டும்.

**விவசாயத்துக்குப் புத்துயிர்**

விவசாயத்தை நவீனப்படுத்தும் வேலைத் திட்டங்களிலும் இறங்கியுள்ளோம். இதன் ஊடாக தேயிலைக் கைத்தொழிலுக்குப் பெரும் மதிப்பு ஏற்படும்.

தற்போது உரம் கையிருப்பில் உள்ளதால் விவசாயத்துக்குப் புத்துயிரளிக்கவேண்டும். நெல்லில் ஆரம்பித்து, தேயிலை மற்றும் ஏனைய பயிர்களை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

பெரும்போகம் மூலம் அடுத்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் அதிக விளைச்சல் கிடைக்குமாக இருந்தால் நாட்டின் பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த அது பெரும் உதவியாக இருக்கும்.

**சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு**

சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டும். அடுத்த ஆண்டு டிசெம்பர் மாதத்துக்குள் அதிகளவான சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு செயற்பட்டால் இதனை அடைய முடியும்.

வெளிநாட்டு நிதி கையிருப்பை இப்போது அதிகரிக்க வழியில்லை. மற்ற எல்லா வழிகளையும் இழந்துவிட்டதால், நமது தொழில் முயற்சிகளை டொலரில் விற்பதே வெளிநாட்டு மூலதனத்தைத் திரட்ட ஒரே வழியாக இருக்கும். இதன் ஊடாக கையிருப்பில் சுமார் 4 பில்லியன் டொலரை சேர்க்க முடியும். இது ரூபாவை மேலும் வலுப்படுத்தும்.

நாம் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் கலந்துரையாடி வருகிறோம். கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களில் 3.2 டிரில்லியன் ரூபா பணம் அச்சிடப்பட்டுள்ளதை நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும். அதனால், உற்பத்தியைப் பெருக்குவதைத் தவிர, இப்பிரச்சினைகளை குறுகிய வழியில் தீர்க்க முடியாது.

இந்த நெருக்கடியுடன் எமது பொருளாதாரம் தடைப்பட்டுள்ளது. பணவீக்கம், நிதி நெருக்கடி ஆகிய அனைத்தும் எமது பொருளாதாரத்துக்கு முட்டுக் கட்டையை ஏற்படுத்தியுள்ளன. அதிலிருந்து மீள வேண்டும். விவசாயம் உள்ளிட்ட அனைத்துக்கும் வரி அறவிட வேண்டியுள்ளது. அதனைத் தவிர எம்மிடம் வேறு வழியில்லை. நாம் அதைப் படிப்படியாக செய்திருக்கலாம் என்று நான் நினைத்தாலும் எமக்குப் பணம் தேவைப்பட்டதால் எம்மால் அவ்வாறு செய்ய முடியவில்லை.

நாம் எம்மிடமுள்ள வெளிநாட்டுக் கையிருப்பைத் தக்க வைத்துக் கொள்வதுடன் இறக்குமதியை மட்டுப்படுத்த வேண்டும். அதன் ஊடாக, எம்மால் எரிபொருள், உரம் மற்றும் மருந்து ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

வருமானம் இல்லாமல் போனதால் எமக்கு கட்டணங்களைச் செலுத்துவதற்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் முடியாமற் போகும். 1.7 மில்லியன் அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்கவும் கடன்களை மீளச் செலுத்தவும் வேண்டியுள்ளது என்பதை நாம் கருத்திற் கொண்டு செயற்படவேண்டும்.



அமெரிக்கா போன்ற நாடுகள் எமக்கு உதவ முன்வந்துள்ளன. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட அனைத்துக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

'தேயிலை உற்பத்தித் துறையில் கடந்து வந்த இக்கட்டான நிலைமைகள்' தொடர்பில் அதன் தலைவர் கூறியிருந்தார். தேயிலைக் கைத்தொழிலை மறுசீரமைத்து உங்களின் ஆதரவுடன் முன்னோக்கிச் செல்லும் வேலைத்திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்துவோம்.

நாடு, 'டைட்டானிக்' கப்பல் போன்று பனிப்பாறையில் முட்டியதன் பின்னரே நான் அதனைப் பொறுப்பேற்றுள்ளேன். கப்பலைக் காப்பாற்ற என்னால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் செய்வேன்- என்றார்.

(ச-22)




# ஆடைச் சுற்றறிக்கை ஆசிரியருக்கும் தேவை

### இலங்கை ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

கொழும்பு, நவ. 2

அரசாங்க சேவையின் கௌரவத்தைப் பேணும் வகையில் அரச உத்தியோகத்தர்களுக்காக வெளியிடப்பட்டுள்ள ஆடை தொடர்பான சுற்றறிக்கையை ஆசிரியர்களுக்கும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு அதிக விலை கொடுத்து புடைவைகளை வாங்குவதில் சிக்கல் நிலவி வருவதாகவும், போக்குவரத்து சிரமம் காரணமாக ஆசிரியர்கள் பலர் துவிச்சக்கர வண்டி, உந்துருளிகளில் பாடசாலைக்கு வருகின்றனர் எனவும் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். புடைவையை விட இலகுவான உடையை அணிவதன் மூலம் ஆசிரியர்களால் மாணவர்களைக் கையாள்வதில் திறமையாக செயற்பட முடியும் என்று மேலும் தெரிவித்துள்ளார். (எ-14)

**வீடு வாடகைக்குத் தேவை**


யாழ்ப்பாணம், சுண்டுக்குளி மற்றும் நல்லூரை அண்டிய பகுதியில் சிறிய குடும்பம் (இருவர்) வசிப்பதற்கு உகந்த நல்ல சூழலையுடைய வீடு வாடகைக்கு தேவை.
(மாத வாடகை 15,000 இற்குள்)
077 378 4186, 077 844 8592

**காணி விற்பனைக்கு**

உரும்பிராய் இந்துக் கல்லூரி வீதியில் 1.5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (பலாலி வீதியில் இருந்து 200m தூரம்)
(CS 47371) (3/6)
தொடர்பு: 076 622 6337

**செந்தமிழன் STUDIO**

நேரடி ஒளிபரப்பு
Live Telecast
உங்கள் இல்லத்து நிகழ்வுகளை நேரலையாக ஒளிபரப்பு செய்திட அழையுங்கள்!
077 6405572
யாழ்ப்பாணம்-வவுனியா-கிளிநொச்சி மன்னார்-முல்லைத்தீவு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.